Registered as a Newspaper

# உதயன்

| சுடர் : 37<br>கதிர் : 229 | புதன்கிழமை<br>13 ஜூலை 2022 | ஆனி 29 ஆம் நாள்<br>வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 12<br>விலை : ரூ. 50 |
|---|---|---|---|

# நாட்டை விட்டு தப்பிக்க கோத்தாபய பிரயத்தனம்!

## விமான நிலைய அதிகாரிகள் வழிவிட மறுப்பு
## அமெரிக்கா, இந்தியா கைவிரிப்பு



**கொழும்பு, ஜூலை 13**

**நாட்டில் இருந்து வெளியேறுவதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன. அமெரிக்காவுக்கான நுழைவிசைவுக்கு (விசா) கோத்தாபய ராஜபக்ச விண்ணப்பித்திருந்த நிலையில், அந்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது என்றும், ஜனாதிபதியுடனான விமானம் இந்திய விமான நிலையம் ஒன்றில் தரையிறங்குவதற்கு விடுக்கப்பட்ட கோரிக்கை இந்தியாவால் மறுக்கப்பட்டுள்ளது என்றும் தெரியவருகின்றது.**

11 ›

## பாண் ரூ.200

யாழ்ப்பாணம், ஜூலை 13

பாணின் விலை நேற்று நள்ளிரவுடன் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், 450 கிராம் பாண் 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்

11 ›

## கடல் வழியாகத் தப்ப கோத்தாபய திட்டம்?

கொழும்பு, ஜூலை 13

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச விமான நிலையம் ஊடாக நாட்டை விட்டு வெளியேறுவது தடுக்கப்பட்டுள்ள நிலையில்,

11 ›

## எரிபொருள் அட்டை நடைமுறையில் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் எரிபொருள் விநியோகத்துக்கு அட்டை வழங்கப்படும் நிலையில், அந்த நடைமுறையில் மாற்றம்

11 ›

## அமைதியான அதிகார மாற்றம்

### சட்டத்தரணிகள் சங்கம் வேண்டுகோள்

கொழும்பு, ஜூலை 13

அமைதியான அதிகார மாற்றத்துக்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

11 ›



## மூன்று வீடுகளில் திருட்டு 10 சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 13

கோப்பாய் பொலிஸ் பிரிவில் மூன்று வீடுகளில் திருட்டு மற்றும் கொள்ளையில் ஈடுபட்ட முதன்மை சந்தேகநபர் மற்றும் நகைக்கடை உரிமையாளர், உடந்தையாக இருந்தவர்கள் என 10 பேர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

09 ›

## இடைக்கால அரசின் காலத்தில் புதிய அரசமைப்பு உருவாக்கம்

### காலிமுகத்திடல் போராட்டத்திலிருந்து அழுத்தம்

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலகலின் பின்னர் உருவாக்கப்படவுள்ள இடைக்கால அரசாங்கத்தின் பதவிக்காலம் நிறைவடைவதற்குள் புதிய அரசமைப்பு, மக்கள் வாக்கெடுப்புடன் உருவாக்கப்பட வேண்டும். தற்போது கைது செய்யப்பட்டுள்ள போராட்டக்காரர்கள், அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டுமென்று காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

(விரிவு - பக்கம் 04)

## தப்பிச் செல்லும்வரை பதவி விலகார் கோத்தா?

கொழும்பு, ஜூலை 13

ஜனாதிபதி பதவியில் இருந்து கோத்தாபய ராஜபக்ச இன்று விலகுவார் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், அதில் நிச்சயமற்ற தன்மை நிலவுகின்றது என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

11 ›

*13ஆம் திகதி இறுதி நாள்!*

## கோத்தாபய, ரணிலுக்கு போராட்டக்காரர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 13

'இன்று 13ஆம் திகதி உங்களுக்கான இறுதி நாள். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

09 ›



"ஓடினார் ஓடினார் இலங்கையின் ஓரத்துக்கே ஓடினார் ஆனால் தப்பியோட வழி இல்லையே!"

## பறந்து போக முயன்ற பஸிலுக்கும் ஏமாற்றம்



கொழும்பு, ஜூலை 13

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் சகோதரரும், முன்னாள் நிதியமைச்சருமான பஸில் ராஜபக்ச நேற்று அதிகாலை நாட்டை விட்டு வெளியேற முயன்றபோது விமான நிலைய அதிகாரிகளால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

வெளிநாடு செல்வதற்காக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்குச்சென்ற முன்னாள் அமைச்சர்

11 ›



## பயணத்தடை விதிக்குமாறு நீதிமன்றில் மனுத் தாக்கல்

கொழும்பு, ஜூலை 13

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச, முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான அஜித் நிவாட் கப்ரால் மற்றும் பேராசிரியர் டபிள்யூ.டி.லக்ஷ்மன்

11 ›

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ரணில் ஜனாதிபதியானால் மோசமான நிலை ஏற்படும்

## மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 13

தற்போதைய பிரதமர் ஏதேனும் ஒரு வகையில் பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டால், அது மக்கள் அபிலாஷைகளுக்கு புறம்பானதாக அமையும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:-

அடுத்த ஜனாதிபதியின் தெரிவு அரசமைப்பின் பிரகாரம் இடம்பெறுமாயின், தற்போதைய பிரதமர் அடுத்த ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார். எனினும், பிரதமர் பதவி விலகவேண்டும் என்பது நாட்டு மக்களினதும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களினதும் பொதுவான கருத்தாக அமைந்துள்ளது.

வரலாற்றுப் புரட்சியை செய்த போராட்டக்களத்தின் அமைப்புகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டே அரசாங்கம் செயற்படவேண்டும்.

அரசாங்கமும் நாடாளுமன்றமும் மேற்கொள்ளும் எத்தகைய நடவடிக்கையாக இருந்தாலும் அரசியல், சமூக ரீதியில் அதை நடைமுறைப்படுத்துவதற்கு போராட்டக்கள செயற்பாட்டாளர்களுடன் கலந்துரையாடி, அவர்களின் கருத்துகளை கவனத்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை சபாநாயகருக்கும் அரசாங்கத்தில் பொறுப்புக் கூறவேண்டிய அனைவருக்கும் தெரிவித்துள்ளேன்.

அத்தகைய நடவடிக்கையை தாமதப்படுத்தினால் நாளுக்கு நாள் நாடு மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்படும் - என்றார். (எ-இ)

# இலங்கையின் நெருக்கடி தீர்வதற்கு விவசாய புத்துயிர்ப்புத் தேவை

## அர்ஜுன் மகேந்திரன் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 13

இலங்கை தற்போது எதிர்நோக்கி வரும் பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபட வரிப்பணத்தை திரட்டி விவசாயத் தொழிலை புத்துயிர் பெறச் செய்ய வேண்டும் என்று இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

பிணைமுறி மோசடியில் ஈடுபட்டதாக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் பிலிப்பைன்ஸில் உள்ள சி.என். என். தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரில் இருந்து இணையவழி காணொலி ஊடாக இந்த நேர்காணலில் கலந்துகொண்ட அவர் இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தார்.

அதில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள், கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட பாதிப்புக்கள், புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் வழங்கப்பட்ட வரிச் சலுகைகள் மற்றும் விவசாயத்துறையில் புதிய அரசாங்கம் எடுத்த தீர்மானங்கள் ஆகியன தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கான பிரதான காரணிகளாகும்.

இலங்கை தற்போது எதிர்நோக்கி வரும் பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபட வரிப்பணத்தை திரட்டி விவசாயத் தொழிலை புத்துயிர் பெறச் செய்ய வேண்டும். தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து பணத்தை அச்சடிப்பதன் மூலமும், வரவு - செலவுத் திட்டத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மூலமும் நாட்டைக் காப்பாற்றுவது கடினம் - என்றார். (எ-இ)

## சர்வகட்சி அரசாங்கம் அமைக்க

# அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும்

கொழும்பு, ஜூலை 13

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு சகல அரசியல் கட்சிகளும் பொது இணக்கப்பாட்டுடன் ஒன்றிணைய வேண்டும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க இடமளித்து அமைச்சுப் பதவிகளில் இருந்து விலகத் தயார் என்பதை அறிவித்துள்ளோம். நாடு வரலாற்றில் என்றுமில்லாதவாறு அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியைத் தற்போது எதிர்கொண்டுள்ளது. இந்த நிலையில் அரசியல் நிலையை உறுதிப்படுத்தாமல் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வுகாண முடியாது. எனவே சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க சகல அரசியல் கட்சிகளும் பொதுக் கொள்கைக்கமைய இணக்கப்பாட்டுடன் ஒன்றிணையவேண்டும்.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் அரசியல் கட்சிகள் தங்களின் கட்சிக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்றனவே தவிர பொதுக் கொள்கைக் கமைய செயற்படுவதில்லை. அரசமைப்பின் பிரகாரம் நாடாளுமன்றின் ஊடாக அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமா என்பது சந்தேகத்துக்குரியதாக உள்ளது.

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் தன்னிச்சையான முறையில் செயற்பட்டதன் விளைவை முழு நாடும் தற்போது எதிர்கொள்கின்றது. இதனால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் முழுமையாக இல்லாதொழிக்கப்பட்டுள்ளது- என்றார். (ம-14,இ)

# இலங்கை நிலைவரம்: சீனா அவதானிப்பு!

கொழும்பு, ஜூலை 13



இலங்கையின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் சீனா உன்னிப்பாக அவதானித்து வருகிறது என சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் வேங்க் வேன்பின் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக கருத்து வெளியிடும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சீனா இலங்கையில் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்களில் முதலீடுகளை செய்துள்ளது. அத்துடன் இலங்கைக்கு பெருந்தொகையான நிதியைக் கடனாக வழங்கியுள்ளது.

இதனால், இலங்கையில் ஏற்படும் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் தொடர்பில் சீனா கூர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. சமூக உறுதித் தன்மை, பொருளாதார முன்னேற்றம், வாழ்வாதார முன்னேற்றம் என்பவற்றை துரிதமாக அடைய இலங்கையர் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவார்கள் என நம்புகின்றோம். அத்துடன் நட்பு நாடு என்ற வகையில் இலங்கைக்கான சீனாவின் ஒத்துழைப்புகள் தொடரும் - என்றார். (ச-இ)

# பிரதமர் அதிகாரத்தை கையாள வேண்டுமாம்

## டக்ளஸின் விருப்பம் இது

கொழும்பு, ஜூலை 13

நாட்டின் தற்போதைய நிலைமைகள் மேலும் மோசமடைவதைத் தடுக்கும் வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனக்கிருக்கும் அதிகாரங்களைப் பிரயோகிக்க வேண்டும் என டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.


அமைச்சரவைக் கூட்டம் நடைபெறாத நிலையில் இறக்குமதி செய்யப்படும் எரிபொருளுக்கான கொடுப்பனவுகள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ள முடியாதுள்ளமை தொடர்பில் சபாநாயகர் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்துள்ளார் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எரிபொருளுக்காக மக்கள் தற்போது நாள்கணக்கில் வீதிகளில் நிற்கின்றனர். கிடைக்கின்ற எரிபொருளைத் தாமதப்படுத்தும் வகையில் செயற்பாடுகள் அமையுமாயின் மின்வெட்டு உட்பட பல மோசமான விளைவுகளை நாடு எதிர்கொள்ள நேரிடும். எனவே நாட்டின் நலன் கருதி அமைச்சரவையின் ஒத்துழைப்புடன் பிரதமர் தனக்குரிய அதிகாரங்களை பயன்படுத்தி விடயங்களை கையாளவேண்டும்- என்று டக்ளஸ் மேலும் தெரிவித்தார் என்று அந்தச் செய்தியறிக்கைகளில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

# நாட்டை மீண்டும் கட்டியெழுப்பலாம்

## ஐ.ம.சக்தி நம்பிக்கை

கொழும்பு, ஜூலை 13



நாட்டை மீளக் கட்டியெழுப்ப முடியும். அந்தக் கடினமான பணியை சஜித் பிரேமதாஸவால் செய்யமுடியும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டை விரைவில் மீட்டெடுக்க வேண்டும். நாட்டின் மீட்சி அனைவரி [illegible] நடவடிக் [illegible] ளது - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## இலங்கையில் பதற்றம்

# 'ப்ளைய் டுபாய்' நிறுவனம் தற்காலிகப் பணிநிறுத்தம்!

கொழும்பு, ஜூலை 13

ஐக்கிய அரபு இராச்சியத்தின் 'ப்ளைய் டுபாய்' நிறுவனம் இலங்கைக்கான அனைத்து விமானப் பயணங்களையும் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.

இலங்கையில் நிலவும் பதற்ற நிலைமையே இதற்குக் காரணம் என அந்த நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். அதன்படி, ஜூலை மாதம் 10ஆம் திகதி முதல் மறுஅறிவித்தல் வரை மேற்படி நிறுவனத்தின் இலங்கைக்கான செயற்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன. கைவிடப்பட்ட விமானப் பயணங்களின், விமானப் பயணச் சீட்டுக்களுக்கான பணம் மீண்டும் பயணிகளுக்கு வழங்கப்படும் என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலை நடத்துவதற்கு 1,000 கோடி ரூபா தேவை

## தேர்தல் ஆணைக்குழு கணிப்பு



**கொழும்பு, ஜூலை 13**

**பொதுத் தேர்தலை நடத்துவதற்கு சுமார் ஆயிரம் கோடி ரூபாவுக்கும் மேல் நிதி தேவைப்படும் என்று தேசிய தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்ததாவது:-

உடனடியாக பொதுத்தேர்தலை நடத்த முடியாது. சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டாலும் நான்கு மாதங்களாவது கட்டாயம் தேவை. அத்துடன் தேர்தலை நடத்துவதற்கு தற்போதைய சூழல் பொருத்தமானது அல்ல. வேட்பாளர்கள் மக்கள் முன்செல்ல முடியுமா? என்ற நிலை தோன்றியுள்ளது. அதேவேளை தற்போது நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக கடதாசி உட்பட அனைத்து பொருள்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. இதனால் தேர்தலை எதிர்கொள்ள ஆயிரம் கோடி ரூபாவுக்கு மேல் செலவாகும் - என்றார்.

இதேவேளை இந்த ஆண்டிறுதிக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# மக்கள் பேரெழுச்சிக்கு முற்றுமுழுதான ஆதரவு

## ஐ.நா.வின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 13

தமது தலைவர்களிடம் ஜனநாயகம், பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றைக் கோருகின்ற இலங்கை மக்களுக்கு நாம் எமது ஆதரவை வெளிப்படுத்துகின்றோம் என்று ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப்பிரதிநிதி ஹனா சிங்கர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவைப் பதவி விலகுமாறு வலியுறுத்தி கடந்த சனிக்கிழமை முதல் நாடளாவிய ரீதியில் பெருமளவான மக்கள் ஒன்றிணைந்து முன்னெடுத்த போராட்டம் சர்வதேச ரீதியில் கவனத்தைப் பெற்றிருக்கும் நிலையில், அது குறித்து வெளியிட்டிருக்கும் அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இலங்கை மக்களின் குரலை, அவர்களின் போராட்டத்தை, எதிர்பார்ப்புக்களை நாம் மதிக்கின்றோம்.

ஊடகவியலாளர்கள் மற்றும் அமைதியான முறையில் போராட்டங்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் உரியவாறான விசாரணைகளை முன்னெடுப்பதும், அந்தச் சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்களை சட்டத்தின்முன் நிறுத்தவேண்டியதும் அவசியமாகும்.

இலங்கை தற்போது முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இதனை உரியவாறு கையாள்வதுடன், இதற்குத் தீர்வுகாண்பதை முன்னிறுத்தி சம்பந்தப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச தரப்பினருடன் செயற்திறன்மிக்க பேச்சுக்களைத் தொடரக்கூடிய சட்டபூர்வமான சீரான அரசாங்கமொன்றை நிறுவவேண்டிய தேவை காணப்படுகின்றது. உணவுப்பாதுகாப்பு, விவசாயம், வாழ்வாதாரம் மற்றும் பின்தங்கிய சமூகப்பிரிவினருக்கு அவசியமான சுகாதாரசேவைக் கொடுப்பனவு ஆகிய விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என்பதுடன் அவற்றை உறுதிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கையில் தற்போதைய நிலைவரம் குறித்து ஐக்கிய நாடுகள் சபை உன்னிப்பாக அவதானம் செலுத்திவருவதுடன், அவசியமான உதவிகள் தொடர்பில் பேச்சுக்களை நடத்துவதற்கும் தயாராக இருக்கின்றோம். அதுமாத்திரமன்றி நாம் உலகநாடுகளை வலியுறுத்துவதைப்போன்று மனித உரிமைகள், சட்டத்தின் ஆட்சி மற்றும் ஜனநாயக நிர்வாகம் ஆகியவற்றுக்கு மதிப்பளிக்குமாறு இலங்கையையும் வலியுறுத்துகின்றோம் -என்றுள்ளது. (ம)

### அலரி மாளிகைக்கு அருகில்

# குழு மோதலில் எண்மர் காயம்!

கொழும்பு, ஜூலை 13

அலரி மாளிகைக்கு அருகில் இரு குழுக்களுக்கு இடையில் நேற்று மோதல் ஏற்பட்ட நிலையில், எட்டுப் பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-14-இ)

# குமார் சங்கக்காரவை ஜனாதிபதி ஆக்குக!

## சமூக வலைத்தளங்களில் வலியுறுத்து



கொழும்பு, ஜூலை 13

இலங்கையின் அடுத்த ஜனாதிபதி யார்? என்பது தொடர்பான விவாதங்கள் பூதாகரமாகியுள்ள நிலையில், இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவரான குமார் சங்கக்காரவை ஜனாதிபதியாக்க வேண்டும் என்று சமூக வலைத்தளங்களில் பலர் பரப்புரையை முன்னெடுத்துள்ளனர்.

இலங்கையின் பல்லின கலாசாரத்தைத் தொடர்ந்து வலியுறுத்திவரும் சங்கா, மே மாதம் 18ஆம் திகதியை போர் வெற்றிவிழாவாக அல்லாமல் வடக்கில் உயிரிழந்த உறவுகளை நினைவுகூரும் நாளாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் சமீபத்தில் வலியுறுத்தியிருந்தார்.

அத்துடன், இலங்கை அரசாங்கத்தின் பல்வேறுபட்ட அத்துமீறல்களை வெளிப்படையாகவே விமர்சித்துவரும் அவர், நாட்டில் அனைத்து இன மக்களும் மதிக்கும் ஒரு நபராக உள்ளார். இந்த நிலையிலேயே சங்கக்காரவை ஜனாதிபதியாக்க வேண்டும் என்று தற்போது குரல்கள் வலுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# சர்வகட்சி அரசாங்கத்தில் ஜே.வி.பி. முக்கியமான இடம்!

## இல்லையேல் போராட்டம் வெடிக்கும் என்று சு.க.வின் பொதுச்செயலர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 13

சர்வகட்சி அரசாங்கத்தில் ஜே.வி.பி.யையும் இணைத்துக்கொள்ள வேண்டும். இல்லையேல் மீண்டும் அதே போராட்டங்களை எதிர்கொள்ள நேரிடும் என சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் பதவி விலகலையடுத்து, ஜனாதிபதி பதவிக்கு பல பெயர்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஏற்கனவே தனது பெயரை அறிவித்துள்ளார். ஏனைய குழுக்கள் பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவை நியமிக்கத் திட்டமிட்டுள்ளன. அவர்களில் ஒருவர் நாடாளுமன்ற வாக்கெடுப்பில் தேர்ந்தெடுக்கப்படுவார்.

ஆனால் இந்த வேட்பாளர்களில் யாரேனும் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு 'கோத்தா கோ கம' செயற்பாட்டாளர்களின் ஆதரவைப் பெற முடியுமா என்பது உறுதியாகத் தெரியவில்லை. அவ்வாறு இரு வேட்பாளர்களையும் அவர்கள் நிராகரிக்கும் பட்சத்தில் அடுத்த விருப்பத்தை ஆராய வேண்டும் - என்றார். (ம)

# நாட்டின் அசாதாரண சூழ்நிலை கோப்குழுக் கூட்டம் பிற்போடல்

## அதன் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 13

நாட்டில் நிலவும் அசாதாரண சூழலால் நேற்று நடைபெறவிருந்த கோப்குழுக் கூட்டம் நடைபெறவில்லை என கோப்குழுவின் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்று அனுப்பி வைத்த ஊடக அறிக்கையிலேயே [illegible] அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை பெற்றோலியக் களஞ்சிய முனைய நிறுவனம் மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஆகியவற்றின் தலைவர்கள் நேற்று கோப் குழுவுக்கு அழைக்கப்பட்டு கூட்டம் நடைபெறவிருந்தது. எனினும் [illegible] காணப்படும் அரசியல் சூழ்நிலைகள் காரணமாக கூட்டம் நடைபெறவில்லை.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் பெற்றோலிய களஞ்சிய முனைய நிறுவனம் ஆகியவை தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகளை நடத்த கோப் குழு தீர்மானித்திருந்தது. இந்த நிலையில் நாட்டின் நிலைமை சுமுகமடைந்ததும் கோப் குழுக் கூட்டம் நடத்தப்படும் -என்றுள்ளது. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள, பௌத்த சக்திக்கு ஒருபோதும் அழிவு இல்லை

## கோத்தாபயவை விரட்டியதும் அதுவே –ஓமல்பே சோபித தேரர் திமிர்த்தனம்

**கொழும்பு, ஜூலை 13**

**'சிங்கள, பௌத்த அதிகாரத்தை எவராலும் அழிக்க முடியாது. அது நிலையானது. இதுவே யதார்த்தபூர்வமான உண்மையும்கூட. சிங்கள, பௌத்த அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தியே கோத்தாபய ராஜபக்ச ஆட்சிக்கு வந்தார். அதனால்தான் அவரை பதவி விலக வைப்பதற்கு சிங்கள, பௌத்த சக்தி முன்னின்று செயற்பட்டது - இவ்வாறு கலாநிதி ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.**

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவையும், அவர் தலைமையிலான அரசையும் விரட்டியடிப்பதற்கு மகா சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்ட நகர்வுகளுக்கு இவரே தலைமைத்துவம் வழங்கியிருந்தார். இந்த நிலையில், தொழிற்சங்க பிரமுகர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் சிலருடன் இணைந்து கொழும்பில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'சிங்கள, பௌத்த தலைமைத்துவம், சிங்கள, பௌத்த அதிகாரம் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் எமக்கு எதிராக கருத்துகள் முன்வைக்கப்பட்டுவருகின்றன. இந்த நாட்டில் சிங்கள, பௌத்த அதிகாரத்தை எவராலும் இல்லாது செய்ய முடியாது. அது நிலையானது. சிங்கள, பௌத்த அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி சிலர் முன்னெடுக்கும் செயற்பாடுகளையே நாம் விமர்சித்துவருகின்றோம். சிங்கள, பௌத்த அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியே கோத்தாபய ஆட்சிக்கு வந்தார். அவர் வசம் இருந்த சிங்கள, பௌத்த அதிகாரம் தற்போது இல்லாமல் போயுள்ளது. அதனால்தான் பதவி விலகுமாறு வலியுறுத்தப்பட்டது. ஏனைய இன மற்றும் மத மக்களின் பூரண ஒத்துழைப்புடனேயே சிங்கள, பௌத்த சக்தியால் அதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஏனைய இன, மத மக்களின் பூரண பங்களிப்புடன் சிங்கள, பௌத்த சக்திதான் செயற்படுகின்றது என்பதை இன்றும் தெளிவாக கூறிவைக்கின்றோம். ராஜபக்ச குடும்பம் பயன்படுத்திய சிங்கள, பௌத்த சக்தி இத்துடன் முடிந்துவிட்டது. எனவே, இனியும் ஏமாறக்கூடாது. ஏனைய இன மற்றும் மதங்களின் ஒத்துழைப்புடன் எதிர்கால தலைவரை தேர்ந்தெடுக்க நாம் முன்வர வேண்டும்.

ஜனாதிபதி பதவி விலகியதும் ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், அலரி மாளிகை உட்பட மக்கள் வசம் உள்ள அரச வளங்கள் பாதுகாப்புத் தரப்புகளிடம் கையளிக்கப்படவேண்டும். அத்துடன், கட்சி, அதிகார போட்டியைக் கைவிட்டு, சர்வ கட்சி அரசுக்காக கட்சிகள் பொது நிலைப்பாட்டுக்கு வரவேண்டும். அவ்வாறு வர முடியாவிட்டால் தகுதியான நபரை நியமிக்க நாம் தயார். தொழிற்சங்க, சிவில் செயற்பாட்டாளர்கள் நாடாளுமன்றம்வர, தேசியப்பட்டியல் எம்.பிக்கள் ஐவர் பதவி விலகவேண்டும்' - என்றார். (ம)

# 1990 இலக்க அம்புலன்ஸ் சேவைக்கு எரிபொருளுக்கு முன்னுரிமை!

யாழ்ப்பாணம், ஜூலை 13

1990 இலக்க அம்புலன்ஸ் சேவைக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஐ.ஓ.சி. எரிபொருள் நிலையத்தில் முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் வழங்கப்படும் என்று இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் கே.பாலகிருஸ்ணன் தெரிவித்தார்.

நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டால் நோயாளிகளுக்கும் பொதுமக்களுக்கும் மருத்துவமனை செல்வதற்கு நோயாளர் அம்புலன்ஸ் வசதியும் போக்குவரத்து வசதியும் இல்லாத நிலை காணப்படுகின்றது. இதனைக் கருத்திற்கொண்டு 1990 அம்புலன்ஸ் இலவசமாக சேவையை வழங்குவதால் அவர்களுக்கான எரிபொருளை முன்னுரிமை அடிப்படையில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க ஐ.ஓ.சி. எரிபொருள் நிலையம் தடையின்றி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் வடக்கு மாகாணத்திலுள்ள சகல ஐஓசி எரிபொருள் நிலையங்களையும் முன்னுரிமை அடிப்படையில் 1990 அம்புலன்ஸ் சேவைக்கான எரிபொருளை வழங்குமாறு ஐ.ஓ.சி. முகாமைத்துவப் பணிப்பாளர் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-14)

# அனைத்து அரசியல் கைதிகளையும் உடனடியாக விடுவித்தல்வேண்டும்!

## காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் அறிக்கை

கொழும்பு, ஜூலை 13

அரசியல் கைதிகள் அனைவரும் எந்த நிபந்தனையும் இன்றி விடுவிக்கப்பட வேண்டும். அத்துடன், அரசியல்வாதிகளால் திருடப்பட்ட பணம் மற்றும் சொத்துக்களை மீண்டும் விசாரணையுடன் கூடிய கணக்காய்வின் மூலம் அரசு கையகப்படுத்தல்வேண்டும் - இவ்வாறு வலியுறுத்தியுள்ளனர் காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள். காலிமுகத்திடலில் அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள போராட்டக்காரர்கள், தமது கோரிக்கைகளைப் பட்டியலிட்டு அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் உள்ளதாவது:-

ஜனாதிபதி கோத்தாபய தலைமையிலான பயனற்ற அரசாங்கம் உடனடியாக வீட்டுக்குச் செல்லவேண்டுமென வலியுறுத்தி ஆரம்பிக்கப்பட்ட வரலாற்று முக்கியத்துவமான போராட்டத்தின் மக்கள் மயப்படுத்தப்பட்ட செயற்பாட்டுத் திட்டம் இதுவாகும். இதன்படி கீழ்வரும் வலியுறுத்தல்களை போராட்டக்காரர்களான நாம் முன்வைக்கின்றோம்.

1.கோத்தாபய ராஜபக்ச உடனடியாகப் பதவி விலகவேண்டும்.

2.ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்சக்கள் உள்ளடங்கிய அரசாங்கம் உடனடியாகப் பதவிவிலக வேண்டும். (அமைச்சரவை, அமைச்சரவையற்ற, பிரதி கருத்திட்ட போன்ற அனைத்து அமைச்சர்கள், அமைச்சின் செயலாளர்கள், ஆலோசகர்கள், அரச நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபன தலைவர்கள், தூதுவர்கள் உள்ளிட்டவர்கள்)

3.கோத்தாபய - ரணில் அரசாங்கம் விலகிய பின்னர் மக்கள் போராட்டத்தின் பொருளாதார, சமூக, அரசியல் நோக்கங்கள் மற்றம் விருப்பங்கள் உள்ளடங்கலாக இடைக்கால ஆட்சி உருவாக்கப்படல் வேண்டும்.

4.மக்கள் போராட்டத்தின் பிரதிநிதிகளுக்கு குறித்த இடைக்கால ஆட்சியில் சட்ட ரீதியான பிணைப்புடன் கூடிய அழுத்தங்கொடுக்கக் கூடிய தலையீடுகளை மேற்கொள்ளக் கூடிய பொதுமக்கள் பேரவை நிறுவப்படல் வேண்டும்.

5.பொருளாதார நெருக்கடிகளால் அழுத்தங்களுக்குள்ளாகிய மக்களை அதிலிருந்து மீட்டெடுப்பதற்கு குறுகிய கால, துரித நிவாரண வேலைத்திட்டத்தைத் தயாரித்தல் வேண்டும். அத்துடன், நுண்நிதி, விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்தல், லீசிங் மற்றும் சிறு வியாபாரக் கடன்களை தள்ளுபடி செய்தல் அல்லது மீள்கொடுப்பனவுகளுக்கான சலுகைத் திட்டங்களைத் தயாரித்தல் வேண்டும்.

6. தற்போது கைது செய்யப்பட்டுள்ள அனைத்து போராட்டக்காரர்கள் உள்ளிட்ட அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவித்தல் மற்றும் அரசியல் பழிவாங்கல்களுக்கு ஆளாகியவர்களுக்கு நீதி வழங்குவதற்கான பொறிமுறையைத் தயாரித்தல் வேண்டும்.

7. அரசியல்வாதிகளால் திருடப்பட்ட பணம் மற்றும் சொத்துக்களை மீண்டும் விசாரணையுடன் கூடிய கணக்காய்வின் மூலம் அரசு கையகப்படுத்தல் வேண்டும்.

8. தற்போது நிலவுகின்ற அரச வரி முறையை முழுமையாக மாற்றியமைத்து, மறைமுகவரி வீதத்தைக் குறைத்தல், நேரடி வரி வீதத்தை அதிகரித்தலையும் நோக்கமாகக் கொண்டு முறையற்ற வரிமுறையின் கீழ் அதிக இலாபமீட்டும் கம்பனிகள் மற்றும் வர்த்தகர்களிடமிருந்து அதிக வரியை அறவிடக்கூடிய வகையிலான வரிக்கொள்கையை மாற்றியமைத்தல் வேண்டும்.

9. நிறைவேற்று அதிகாரத்தை நீக்கி, சட்டத்தை அனைவருக்கும் சமமாக்குதல் வேண்டும். அத்துடன், ஜனநாயகக் கட்டமைப்புக்களை வலுப்படுத்தல் போன்றவற்றுக்காக தற்போது காணப்படும் அரசியலமைப்பில் மேற்கொள்ளக் கூடிய ஜனநாயக மறுசீரமைப்புக்களைத் துரிதமாக மேற்கொள்ள வேண்டும்.

10. மக்கள் அதிகாரத்தை உறுதிப்படுத்தும் புதிய அரசமைப்பை மக்கள் தீர்ப்பின் மூலம் துரிதமாக நிறைவேற்றுதல் வேண்டும்.

11. மக்களுக்குப் பொறுப்புக்கூறாத மக்கள் பிரதிநிதிகளை, மக்கள் மீள அழைப்பதற்குள்ள உரிமையை உறுதிப்படுத்தும் பொறிமுறையொன்றை உருவாக்கல் வேண்டும். அத்துடன், சட்டவாக்கம், சட்டத் திருத்தங்களின்போது மக்கள் பங்கேற்கக் கூடிய பொறிமுறையொன்றைத் தயாரித்தல் வேண்டும். அத்துடன், மனித உரிமைகள், பெண்கள் மற்றும் சிறுவர் உரிமைகளை வலுப்படுத்துவதற்காக தற்போதுள்ள மட்டுப்பாடுகளை நீக்குகின்ற வகையிலான உறுப்புரைகளை உட்சேர்த்தல் வேண்டும்.

12. இனவாதம், தேசிய ரீதியான அழுத்தங்களை முழுமையாக இல்லாது செய்து சமத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கும், சகல இனத்தவர்களதும் மதம், மொழி, பால் மற்றும் ஏனைய கலாசார தனித்துவ அடையாளங்களை உறுதிப்படுத்துவதற்கும் ஏற்புடைய வகையில் அடிப்படைச் சட்டங்களை பலப்படுத்தல் வேண்டும்.

இடைக்கால ஆட்சியின் அடிப்படை நோக்கங்களாக, மேற்படி முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்படுவதுடன், அவ்வாறு உருவாக்கப்படும் இடைக்கால ஆட்சிக் கட்டமைப்பு 12 மாதங்கள் உயர்ந்தபட்ச காலப்பகுதியில் புதிய அரசியலமைப்பை நிறைவேற்றுவதன் மூலம் நிறைவு செய்யப்படல் வேண்டும்.

மேற்படி அனைத்தும் நிறைவேற்றப்படும் வரைக்கும் மக்கள் போராட்டம் புதிய பரிமாணத்தில் மேற்கொள்ளப்படும் - என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறைகரம் வேண்டாம்

ஜூலை 9 ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற மக்கள் பேரெழுச்சியைத் தொடர்ந்து, இன்று பதவியில் இருந்து விலகுகின்றார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச. லட்சக்கணக்கான மக்கள் கொழும்பில் ஜனாதிபயின் அதிகாரபீட மையங்களான ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதிசெயலகம்என்பவற்றைமுற்றுகையிட்டதைத் தொடர்ந்து 'அந்தர வெளியில் அகப்பட்ட வானகன்' போன்று திகைத்த கோத்தாபய, அன்றையதினமே பதவி விலகும் முடிவை எடுத்திருந்தார். எனினும், 13 ஆம் திகதியே – அதாவது இன்றையதினமே – தான் முறைப்படி பதவி விலகுவேன் என்றும் அவர் அறிவித்தார். பதவி விலகுவது என்று முடிவாகிய பின்னர் எதற்காக இந்த மூன்று நாள்கள் அவகாசக் கோரல்? என்பது நிச்சயம் ஓர் இருண்மை நிலைதான். இதற்கான விளக்கத்தை – தெளிவை – வரையறுத்துக்கூற குறைந்தபட்சம் எதிர்க்கட்சிகளாலும் முடியவில்லை. ஒரு விதத்தில் அது இயலாத காரியம்தான்.

நாம் அனைவரும் நிழல் அரசுகள் என்பதைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்போம். அதாவது ஆட்சியில் ஒருவர் இருப்பார். அதிகாரங்கள் அவரிடம்தான் குவிந்திருக்கும். ஆனால், அவர் ஆட்சியாளனாக அல்லாமல் விசுவாசியாகவே செயற்பட்டுக் கொண்டிருப்பார். ஒரு மறைகரம் அவரை எந்நேரமும் வழிநடத்தும். ஆக மொத்தத்தில் ஆட்சியில் இருக்கும் குறித்த நபரின் பெயர், அதிகாரம் என்பன வெறும் அடையாளமாக மட்டுமே இருக்குமே தவிர, அவரின் பின்புலத்தில் இருந்து அவரை இயக்கும் மறைகரம்தான் அந்த வரப்பிரசாதங்களை மொத்தமாக அனுபவிக்கும்.

மியான்மர் நாட்டில் தற்போது இராணுவ ஆட்சி அறிவிக்கப்படுவதற்கு முன்னர் அங்கு இடம்பெற்ற ஆட்சி முறையை இதற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். 1962 ஆம் ஆண்டுமுதல் சுமார் 50 ஆண்டுகளுக்கும் மேலாக இராணுவ ஆட்சியை எதிர்கொண்ட மியான்மர், முதன்முதலாக 2015 ஆம் ஆண்டு ஜனநாயகத் தேர்தல் ஒன்றை எதிர்கொண்டது. இதில் அமைதிக்கான நோபல் பரிசிலை வென்றவரான ஆங் சான் சூச்சியின் கட்சி வெற்றிபெற்றது. ஆனால், ஆங் சான் சூச்சியால் அங்கு ஆட்சியமைக்க முடியாத நிலை. காரணம், அவரின் குடும்ப உறுப்பினர்கள் வெளிநாட்டுக் குடியுரிமையைப் பெற்றிருந்ததால் அந்த நாட்டின் அரசமைப்பு, சூச்சி ஆட்சியமைப்பதைத் தடைசெய்தது. எனவே சூச்சி, டின் கியாவ் என்ற நபரை அந்த நாட்டின் அதிபராக நியமித்தார். ஆயினும் டின் கியாவ் என்ற நபர் சர்வதேச அளவில் பேசுபொருள் ஆனதைவிட பலநூறு மடங்கு சூச்சிதான் பேசுபொருளானார். டின் கியாவின் ஆட்சி என்று மியான்மர் விளிக்கப்பட்டதை விட சூச்சியின் ஆட்சி என்று விளிக்கப்பட்டதுதான் அதிகம்.


தமிழகத்தின் மறைந்த முதல்வர் ஜெயலலிதா உடல் நலக்குறைவால் பாதிக்கப்படும்போதும், இன்னபல காரணங்களாலும் ஓ.பன்னீர்செல்வத்தை முதல்வராக நியமிக்கின்றமையை வழக்கமாகக் கொண்டிருந்ததும் இந்த 'அரசியல் மறைகர' விசுவாசத்துக்காகத்தான்.

ஆக, சூச்சிக்கு எவ்வாறு டின் கியாவோ – ஜெயலலிதாவுக்கு எவ்வாறு ஓ.பன்னீர்செல்வமோ அவ்வாறு ஜனாதிபதி கோத்தாபயவும் இதர ராஜபக்சக்களும் தமக்கென ஒரு மறைகரத்தை தேடிக்கொண்டிருக்கின்றார்களா? என்ற சந்தேகம் தற்போது வலுப்பெறுவதைத் தவிர்க்க முடியாததாகின்றது. ஜனாதிபதியின் அறிவிப்புக்கள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவின் மூலமாகத்தான் விடுக்கப்படும் என்று ஜனாதிபதி செயலகம் நேற்றுமுன்தினம் விடுத்த அறிக்கை, இந்த மறைகர ஆட்சிக்கான ஆரம்பம்தானோ என்ற கேள்விகளும் கூடவே எழுகின்றன.

உண்மையில் காலிமுகத்திடல் போராட்டக்காரர்களும் ஒட்டுமொத்த இலங்கை மக்களும் தற்போது கூடுதல் விழிப்புடன் இருக்கவேண்டிய நேரமிது. கோத்தாபய, ரணில் மட்டுமல்ல மறைகரத்தின் பிரதிநிதிகளும் முழுமையாக வழித்துத்துடைக்கப்படவேண்டியவர்கள். மிச்சம் விடக்கூடாதவை தீயும், பகையும் மட்டுமல்ல ராஜபக்சக்களினதும், ரணிலினதும் அரசியலும்தான்.

நாளொரு நல்வார்த்தை

"பாம்புகளைப் போல விவேகமும், புறாக்களைப் போல கபடமில்லாமலும் இருங்கள்" - இயேசு



# எரிவாயுவுக்கான வரிசை விரைவில் முடிவுக்கு வரும்

## லிட்ரோ தலைவர் தெரிவிப்பு



**கொழும்பு, ஜூலை 13**

**நாட்டில் எரிவாயுவுக்கு ஏற்பட்டுள்ள வரிசைகள் இந்த மாதம் 31 ஆம் திகதிக்குள் முடிவுக்கு வரும் என்று லிட்ரோ நிறுவன்தின் தலைவர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீண்டகாலமாக எரிவாயுவை இறக்குமதி செய்ய முடியாத நிலைமை காணப்பட்ட போதிலும், தற்போது இறக்குமதிப் பணிகளும் விநியோகப் பணிகளும் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இதன்படி இன்று (நேற்று) முதல் தினமும் ஒரு லட்சத்து 20 ஆயிரம் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்க திட்டமிடப்பட் டுள்ளது. இந்த மாத இறுதிக்குள் 33 ஆயிரம் மெற்றிக்தொன் எரிவாயுவை இறக்குமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒக்டோபர் மாத இறுதிக்குள் ஒரு லட்சம் மெற்றிக்தொன் எரிவாயுவை இறக்குமதி செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே எரிவாயுவுக்கான தட்டுப்பாடு இனிவரும் நாள்களில் இல்லாமல் செய்யப்படும். சீரான விநியோகம் மேற்கொள்ளப்படும். ஆதலால் பொதுமக்கள் கறுப்புச் சந்தையில் எரிவாயுவை கொள்வனவு செய்யக்கூடாது - என்றார். (ம)

# இலங்கையின் பணவீக்கம் உலகில் மூன்றாம் இடம்!

## சிம்பாப்வே, துருக்கி முதல் இரு இடங்களில்

கொழும்பு, ஜூலை 13

உலகில் அதிக பணவீக்கத்தைப் பதிவுசெய்த நாடுகளில் இரண்டாவது இடத்தில் இருந்த இலங்கை தற்போது மூன்றாவது இடத்துக்கு ஏற்றம் (நேர்மறை) கண்டிருக்கின்றது.

ஜோன்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக் கழகம் உலகில் பணவீக்கம் அதிகம் உள்ள நாடுகளைப் பட்டியலிட்டது.



துருக்கியில் ஏற்பட்ட மிகையான பணவீக்கத்தை அடுத்து அந்த நாடு இரண்டாவது இடத்துக்குச் செல்ல இலங்கை மூன்றாவது இடத்துக்கு வந்துள்ளது.

நான்காவது மற்றும் ஐந்தாவது இடங்களை முறையே வெனிசுலா மற்றும் லெபனான் ஆகிய நாடுகள் பிடித்துள்ளன. ஜோன்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக் கழகத்தின் மூத்த பேராசிரியர் ஸ்டீவ் ஹாங்கினால் உலகப் பொருளாதார நிலைமை குறித்து மாதந்தோறும் பணவீக்கச் சுட்டெண் வெளியிடப் படுவது குறிப்பிடத்தக்கது. (ம-14.இ)

நாளை 14.07.2022 வியாழக்கிழமை ஆனி 30

சுபநேரம் : 07.30 - 09.00
ராகுகாலம்: 01.30 - 03.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபோக அறுவடைக்கான எரிபொருளை வழங்குங்கள்

## அம்பலப்பெருமாள்குள விவசாயிகள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூலை 13

**முல்லைத்தீவு, அம்பலப்பெருமாள்குள கிராம விவசாயிகள் சிறுபோக நெற்செய்கை அறுவடைக்கான எரிபொருள் கிடைக்கப்பெறாமையால் அறுவடையை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

இது தொடர்பில் அந்தப் பகுதி விவசாயிகள் மேலும் தெரிவித்ததாவது:-

சிறுபோக நெற்செய்கையை ஆரம்பிக்கும்போதே எரிபொருள் நெருக்கடி காணப்பட்ட நிலையிலும் பெரும் சிரமங்களுக்கு மத்தியிலேயே விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபட்டனர். எமது மாவட்டத்துக்கு வழங்கப்படும் எரிபொருள் விவசாயிகளுக்கு முதன்மையாகப் பகிர்ந்தளிக்கப்படும் என மாவட்டச் செயலாளர் உறுதியளித்துள்ளார். கிராம விவசாயிகளினது விவரங்கள், துணுக்காய் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. எனவே எமக்குரிய எரிபொருளை வழங்க அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் -என்றனர். (ச-13)



# வணிக பீடத்தின் ஆய்வு மாநாடு

யாழ்ப்பாணம், ஜூலை 13

'புதிய இயல்பில் மீள்தன்மைக்காக வணிகத்தை மாற்றுதல்' என்ற தொனிப்பொருளில் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தால் வருடாந்தம் நடத்தப்படும் சர்வதேச ஆய்வு மாநாட்டின் 7ஆவது மாநாடு நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆய்வு மாநாட்டில் கணக்கியல் மற்றும் நிதி, சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகச் சங்கிலி, முயற்சியாண்மையும் புதியன புனைதலும், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல், மனித வள முகாமைத்துவம் மற்றும் நிறுவன கற்கைகள், கற்றல் கலாசாரம் மற்றும் சமூகம் ஆகிய 7 உப பிரிவுகளின் கீழ் 43 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. (ய)

# பொதுமண்டபப் பணிகள் இரணைதீவில் நிறைவு


## பூநகரி பிரதேசசபையின் உப தவிசாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூலை 13

கிளிநொச்சி பூநகரி- இரணைதீவில் அமைக்கப்பட்டு வந்த பொதுமண்டபப் பணிகள் நிறைவடைந்துள்ளன என பூநகரி பிரதேசசபையின் உப தவிசாளர் தெரிவித்துள்ளார்.

இரணைதீவுக்கு கடமைக்குச் செல்வோரின் நலன் கருதி 4 மில்லியன் ரூபா செலவில் இரணைதீவில் இந்தப் பொதுமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது இடம்பெறும் சூரியமின்கலம் பொருத்தும் வேலைகள் நிறைவடைந்ததும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை ஒன்றை இந்த மண்டபத்தில் இயங்கவைக்க முடியும். இரணைதீவுக்கு தொழிலுக்குச் செல்வோரும் இந்த மண்டபத்தில் தங்கமுடியும் என சபை உப தவிசாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-13)



# மழைக்குச் சாத்தியம்

கொழும்பு, ஜூலை 13

சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா மாவட்டங்களிலும் மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

மேல் மாகாணத்திலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சிறிதளவு மழை பெய்யக்கூடும். அத்துடன் காற்றானது மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும் மேற்கு, தெற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கி.மீ. வேகத்திலும், மேற்கு முதல் தென்மேற்கு திசையில் 30-40 கி.மீ வேகத்திலும், நீர்கொழும்பிலிருந்து புத்தளம் மற்றும் மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கடற்பரப்புகளிலும் காலியிலிருந்து மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளிலும் மணித்தியாலத்துக்கு 50-55 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் கடல்நிலையானது நீர்கொழும்பில் இருந்து புத்தளம் மற்றும் மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளும் மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளும் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும்.

எனவே மின்னல் தாக்கம், கொந்தளிப்பு போன்றவற்றால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் -என்றுள்ளது. (ய-இ)

## விவசாயிகளுக்கு

# 10 நாள்களுக்குள் உரம் விநியோகம்

கொழும்பு, ஜூலை 13

இந்திய அரசின் கடன் திட்டத்தின்கீழ் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட உரத்தை, நேற்றுமுதல் அடுத்த பத்து நாள்களுக்குள் விவசாயிகளுக்கு வழங்கி பணிகளை முழுமையாக நிறைவுறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு 50 கிலோ கிராம் உர மூடை ஒன்று தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ய)



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் உதயன் குழுமத் தலைவருமான ஈஸ்வரபாதம் சரவணபவனின் நிதிப்பங்களிப்பில், சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக்கல்வி நிலைய பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் தெரிவுசெய்யப்பட்ட 100 மாணவர்களுக்கான வீட்டுத்தோட்ட விதைகள் மற்றும் சேதனப்பசளைகள் என்பன கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன. (ச)

# பழைய மாணவர்களின் அர்ப்பணிப்பால் வானுயர்ந்து நிற்கின்றது அருணோதயா!

## மாவட்டச் செயலர் புகழாரம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

பழைய மாணவர்களின் அர்ப்பணிப்பால் அளவெட்டி அருணோதயக் கல்லூரி வானுயர்ந்து நிற்கின்றது. இவ்வாறு யாழ். மாவட்டச்செயலர் [illegible] அருணோதயக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற நிறுவுநர் தின விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஒரு கல்லூரியின் வளர்ச்சியை நிறுவுநர்களின் நினைவு தினத்தை [illegible]டுகின்றபோது அறிந்து [illegible]ள்ளலாம். அதேவேளை இந்த அருணோதயக் கல்லூரிக்காகப் பழைய மாணவர்கள் செய்த அர்ப்பணிப்புகள் மிகப்பெரியவை. கல்லூரி அதிபரின் அறிக்கையில் அவற்றைக் காணக்கூடியதாகவுள்ளது. இவ்வாறு கல்லூரியின் கல்வி வளர்ச்சிக்கு பழைய மாணவர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் போன்றோர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் அந்தக் கல்லூரியின் கல்விநிலையும் இதர செயற்பாடுகளும் வானுயரும் -என்றார். (ம-14-63)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** இரண்டு நாள்களாக ஏற்பட்ட நெருக்கடி விலகும். உங்கள் விருப்பம் நிறைவேறும். சூழ்நிலைகளை புரிந்து கொண்டு செயற்படுவீர்கள். உங்கள் முயற்சி ஒன்று பலிதமாகும். நண்பர்களின் உதவி கிடைக்கும்.

**இடபம்:** சந்திராஷ்டமம் என்பதால் வேலையில் பதற்றம் வேண்டாம். விழிப்புணர்வுடன் செயற்படுவீர்கள். எதிர்பார்ப்பு தள்ளிப்போகும். முயற்சிகளில் பின்னடைவு உண்டாகும்.

**மிதுனம்:** நண்பர்களின் உதவியுடன் செயல் ஒன்றை நிறைவேற்றுவீர்கள். லாபகரமான நாள். குடும்பத்தில் ஏற்பட்ட மனகசப்பு நீங்கும். தம்பதியருக்குள் ஒற்றுமை ஏற்படும்.

**கடகம்:** முயற்சி ஒன்றில் போராடி வெற்றி பெறுவீர்கள். உங்கள் திறமை வெளிப்படும் நாள். பழைய பிரச்சினை ஒன்றுக்குத் தீர்வு காண்பீர்கள். மறைமுக எதிரிகள் விலகிச்செல்வர். செயல்களில் வெற்றி காணும் நாள்.

**சிம்மம்:** குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உங்கள் எண்ணம் நிறைவேறும். உங்களைச் சுற்றி இருப்பவர்களில் நல்லவர், பகைவர் யார் என்பதைப் புரிந்து கொள்வீர்கள்.

**கன்னி:** தடைகளைத் தாண்டி உங்கள் செயலில் முன்னேற்றம் காண்பீர்கள். மகிழ்ச்சியான நாள். புதிய வாகனம் வாங்கும் முயற்சி நிறைவேறும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும் . லாபம் காண்பீர்கள்.

**துலாம்:** உங்கள் செயலில் இருந்து வந்த தடைகள் விலகும். மகிழ்ச்சியான நாள். வாகனத்தை சீர்செய்வீர்கள். நண்பர்களின் துணையுடன் பிரச்சினைக்கு தீர்வு காண்பீர்கள். தொழில் சங்கடத்தை சந்திப்பீர்கள்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவி வந்து சேரும். நண்பர்களால் ஒரு முயற்சி நிறைவேறும். தம்பதியருக்குள் ஏற்பட்ட பிரச்சினை விலகும். புதிய செயல் நிறைவேறும். உங்கள் மதிப்பு அதிகரிக்கும்.

**தனுசு:** மனதில் இனம் புரியாத குழப்பம் உண்டாகும். முயற்சியில் தடுமாற்றம் ஏற்படும். எதிர்ப்புகளை சமாளித்து உங்கள் செயலில் வெற்றி அடைவீர்கள். குடும்பத்தினரின் நலனில் அக்கறை அதிகரிக்கும்.

**மகரம்:** மறைமுக எதிர்ப்பு தோன்றினாலும் அவற்றைச் சமாளிப்பீர்கள். தன்னம்பிக்கை கூடும் நாள். தம்பதியர் ஒருவருக்கு ஒருவர் அனுசரித்து செல்வீர்கள். நன்மை அதிகரிக்கும்.

**கும்பம்:** நேற்றைய வேலைகளை திட்டமிட்டபடி முடிப்பீர்கள். எதிர்பாராத பணம் வந்து சேரும். வியாபாரத்தில் லாபம் காண்பீர்கள். பழைய கடன்களை அடைக்க முயற்சிப்பீர்கள். எதிர்பார்த்த செயலால் லாபம் காண்பீர்கள்.

**மீனம்:** சுறுசுறுப்பாகச் செயற்பட்டு பிறருக்கு கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். காணாமற் போன ஒரு பொருள் இன்று கிடைக்கும். புதிய நம்பிக்கை உண்டாகும். முயற்சி கைகூடும். உங்கள் திறமை வெளிப்படும்.

# அரசியல்வாதிகளை அல்லாமல் பொதுமக்களைப் பாதுகாருங்கள்

## படையினரின் நடவடிக்கைகளுக்கு சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம்

**கொழும்பு, ஜூலை 13**

**பாதுகாப்புத் தரப்பினர் அதிகாரத்திலுள்ள அரசியல்வாதிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர், குடிமக்களின் அரசமைப்பு உரிமைகளை பாதுகாக்க வேண்டும். மக்களின் அடிப்படை உரிமையான கருத்துச் சுதந்திரத்தின் ஓர் அங்கமான அமைதிப் போராட்ட உரிமையை உறுதிசெய்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது.**


இதுதொடர்பில் சுதந்திர ஊடக இயக்கம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

ஜனாதிபதியை தனது பதவியிலிருந்து விலகுமாறுகோரி பொதுமக்கள், மத குருமார்கள், தொழிற்சங்கங்கள், வெகுஜன அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் இணைந்து ஜூலை 9ஆம் திகதி மேற்கொண்ட போராட்டம் தொடர்பில் அரசாங்க ஆதரவு தரப்பினர்கள் வகிக்கும் நிலைப்பாடு, நடவடிக்கை குறித்து நாம் உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம்.

பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படையினரை குவித்து போராட்டங்களை ஒடுக்க அரசாங்கம் தயாராகியது. கடந்த மூன்று மாதங்களில் பல சந்தர்ப்பங்களில், அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களை நசுக்க பாதுகாப்புப் படையினர் நடந்துகொண்ட விதம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள மனித உரிமைப் பாதுகாவலர்களால் கடுமையாக விமர்சிக்கப்பட்டது.

அமைதியான போராட்டங்களில் ஈடுபடுவதற்கான உரிமை என்பது அரசமைப்புச் சட்டத்தால் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள 'பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்தின்' கீழ் உள்ளடக்கப்படுகின்றது. அமைதியான போராட்டங்களுக்கு எதிராகப் பலாத்காரத்தைப் பயன்படுத்துவது அடிப்படை உரிமையை மீறும் செயலாகும்.

பொலிஸார் அதிகாரத்தில் உள்ள அரசியல்வாதிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு முதல் குடிமக்களின் அரசமைப்பு உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதை கருத்திற்கொண்டு செயற்படவேண்டும். அத்துடன் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பில் பாதுகாப்புப் படையினருக்கு உரிய அறிவுறுத்தல்களை சார்ந்தோர் வழங்க வேண்டும். ஜனநாயக ஆட்சியை மீண்டும் நிறுவுவதற்கும் நாட்டைத் திவால் நிலையிலிருந்து விடுவிப்பதற்கும் இன்றியமையாத நடவடிக்கையான மக்கள் போராட்டத்துக்கு அனைவரும் வலுசேர்ப்போம்- என்றுள்ளது. (ச-இ)



# ஜனநாயகத்தின் தூணான ஊடகங்கள் ஆயுதத்தால் அடக்கி ஆளப்படுகின்றன

## ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமைக்கு வவுனியா ஊடக அமையம் கண்டனம்

வவுனியா, ஜூலை 13

நாட்டில் தொடர்ந்தும் ஊடக சுதந்திரம் மோசமாக மீறப்படுகின்றது என்பதை கொழும்பு போராட்டத்தில் செய்தி சேகரித்துக் கொண்டிருந்த 4 ஊடகவியலாளர்கள் மீது பாதுகாப்புத் தரப்பின் மேற்கொண்ட தாக்குதல் வெளிப்படுத்தியுள்ளது என வவுனியா ஊடக அமையம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியால் மக்கள் தொடர்ந்தும் தன்னெழுச்சியாக கோத்தாபய ராஜபக்ச அரசாங்கத்துக்கு எதிராகப் போராடி வருகின்றனர். அதன் ஒரு கட்டமாக கடந்த 9ஆம் திகதி ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, பிரதமரின் வீடு என்பன மக்களால் முற்றுகையிடப்பட்டன.

இதன்போது மக்களுக்கு உண்மை நிலையை வெளிக்கொணர செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் நால்வர் மிலேச்சத்தமாக பாதுகாப்புத் தரப்பினரால் தாக்கப்பட்டமையை ஏற்றுக்கொள்ள முடியாது.

போர்க் காலத்திலும் போருக்குப் பின்னரும் இந்த நாட்டில் கருத்துச் சுதந்திரத்துக்கு இடமளிக்காது ஆட்சியாளர்கள், ஆயுதமுனையில் அதனை அடக்கி ஆள முற்பட்டுள்ளனர். போர் நிறைவடைந்து 13 ஆண்டுகள் கடந்த நிலையிலும் ஊடக அடக்குமுறை தொடர்கின்றது என்பதை இந்தச் சம்பவம் புடம் போட்டுக் காட்டுகின்றது.

கடந்த காலங்களில் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள், ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டமை என்பவற்றுடன் தொடர்புடைய குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டால் மட்டுமே இவ்வாறான சம்பவங்கள் மீள நிகழாது - என்றுள்ளது. (ச-110)

# நாட்டின் ஊடக சுதந்திரம் தொடர்ந்து நசுக்கப்படுகிறது

## முல்லைத்தீவு ஊடக அமையம் கண்டனம்

முல்லைத்தீவு, ஜூலை 13

நாட்டில் ஊடக சுதந்திரம் தொடர்ச்சியாக நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஊடகவியலாளர்களின் ஊடகப் பணிக்கு இடையூறு விளைவிக்கும், அச்சுறுத்தல் மேற்கொள்ளும், சித்திரவதைக்கு உட்படுத்தும் அரச பாதுகாப்பு தரப்பினரின் இவ்வாறான தொடர் செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும் என முல்லைத்தீவு ஊடக அமையம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் உள்ளதாவது:

நாட்டில் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தைப் பதவிவிலகுமாறு வலியுறுத்தி எழுச்சிப் போராட்டத்தை தொடர்ச்சியாக மக்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தநிலையில் செய்தி சேகரிப்புக்காக அங்கு சென்ற ஊடகவியலாளர்கள் நால்வர் கொடூரமான முறையில் பொலிஸாராலும், விசேட அதிரடிப் படையினராலும் தாக்கப்பட்டுள்ளார்கள்.

ஊடகவியலாளர்கள் மீதான இந்த மிலேச்சத்தனமான தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அரசாங்கத்தின் [illegible] நடவடிக்கைகளை அறிக்கையிடும்போதே இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெறுகின்றன.

வடக்கு - கிழக்கில் இவ்வாறான அறிக்கையிடல்கள் மனித உரிமை செயற்பாடுகளை முன்னெடுத்த ஊடகவியலாளர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டும், காணாமல் ஆக்கப்பட்டும் வரும் நிலையில் தற்போது தெற்கில் அது நிகழ்கின்றது.

அரசின் ஊதுகுழலாகச் செயற்படும் அரச பாதுகாப்பு தரப்பினரின் இவ்வாறான மிலேச்சத்தனமான நடவடிக்கைகள், சுயாதீனமானதும் வினைத்திறனானதுமான ஊடக செயற்பாட்டுக்கு அடிக்கப்பட்டுவரும் சாவு மணியாகும். இதற்கெதிராக அனைவரும் குரல் கொடுக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது- என்றுள்ளது. (ச-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜீவ் கொலை வழக்கு:

# ரவிச்சந்திரன் சார்பில் உச்சநீதிமன்றில் மனு

புதுடில்லி, ஜூலை 13 ராஜீவ் கொலைக் கைதியான ரவிச்சந்திரன் சார்பில் உச்சநீதிமன்றில் மேன்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலை வழக்கில் கைதான ஆர். பி.ரவிச்சந்திரன் தமிழக ஆளுநர் ஒப்புதல் இல்லாமல் விடுதலை செய்யக்கோரி தாக்கல் செய்த மனுக்களை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்திருந்தது. அதுகுறித்து நீதிபதிகள், பேரறிவாளனை உச்சநீதிமன்றம் அதன் சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி விடுவித்துள்ளது. அந்த சிறப்பு அதிகாரம் உயர்நீதிமன்றுக்கு இல்லை. எனவே இந்த மனுக்களை தள்ளுபடி செய்கிறோம் எனத் தெரிவித்தனர். இந்த நிலையில், சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுக்கமைய ரவிச்சந்திரன் சார்பில் உச்சநீதிமன்றில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ச-இ)


## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 21 . 04 . 1947



இறப்பு 03 . 07 . 2012

**திருமதி பரஞ்சோதி வள்ளிப்பிள்ளை**

திதி: பூரணை

ஆண்டுகள் பத்து கடந்து சென்றாலும்
ஆறவில்லை எங்கள் மனம் குடும்பம் என்ற கோயிலில்
குலவிளக்காக திகழ்ந்த எங்கள் தெய்வமே!
மாண்டாலும், மறையாது
உங்கள் நினைவு என்றென்றும்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இக்கிரானை
கந்தரோடை, சுன்னாகம். (cs 19938) (2.6)

கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 30 . 05 . 1985



மறைவு 11 . 07 . 2022

**மரியநாயகம் அனுசியா**

எமது கல்லூரி ஆசிரியையின் பிரிவால் துயருறும்
அனைவருக்கும் எமது கல்லூரி சார்பாக ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம
சாந்திக்காக ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்

இரக்கம் நிறைந்த இறைவன் இவருக்கு நித்திய வாழ்வும்
நிலையான அமைதியும் அளிப்பாராக....

பிரிவால் துயருறும் :

**ஆசிரியர் நட்புறவுக் கழகம்**
**யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி.**

(cr.36644) (2.6)

## தொழிலாளர் ஒப்பந்தக்காரர்கள் தேவை

ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்டு இயக்கச்சியில் இயங்கி வரும் முருங்கை தோட்டத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் தோட்ட வேலைகள் செய்வதற்கு தொழிலாளர் ஒப்பந்தகாரர்கள் தேவை.

- தரமான தொழிலாளர்களை தம் வசம் கொண்டுள்ளோர் நேரில் வந்து தொடர்பு கொள்ளவும்.
- வேலை அளவு, ஒப்பந்த தொகை நேரில் பார்வையிட்ட பின் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு
உதவி முகாமையாளர்,
வரையறுக்கப்பட்ட ஹெரிடேஜ் [illegible]
இயக்கச்சி.

077 1188 361

யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ-து)

## கேள்வி அறிவித்தல்

### கடைக்கட்டடம் வாடகைக்கு வழங்குவதற்கான கூறுவிலை கோரல்

யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்திற்கு சொந்தமான இல. 127, கே.கே. எஸ் வீதியில் அமைந்துள்ள கீழ்த்தளத்தில் இடது பக்கமாக அமைந்துள்ள 45 X 15 சதுர அடி பரப்பளவு கொண்ட சகல வசதிகளுடன் கூடிய முதலாவது கடைக்கட்டடம் வாடகைக்கு வழங்கப்படும், சங்கம் நடாத்தும் தொழில்கள் சேவைகள் தவிர்ந்ததும், மற்றும் மதுபான விற்பனையுடன் தொடர்புடைய வியாபாரம் தவிர்ந்த ஏனைய துறை சார்ந்த தொழில்கள், அமைப்புக்கள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள், நிறுவன முகவர்களுக்கு வழங்கப்படும்.

கடைக்கட்டடத்தைப் பார்வையிட விரும்புவோர் மற்றும் ஏனைய விபரங்களை சங்க தலைமைக்காரியாலயத்தில் நேரிலோ அல்லது தொலைபேசி இலக்கத்துடன் (021 222 2587) அலுவலக நேரத்தில் (திங்கட்கிழமை - வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரையிலும், சனிக்கிழமைகளில் காலை 8.30 மணி தொடக்கம் 1.30 மணி வரையிலும் தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி :- 20.07.2022

விண்ணப்பிக்கும் முறை - மேற்படி கூறுவிலைக்கான விண்ணப்பப்படிவத்தினை சங்கத்தின் தலைமைக்காரியாலயத்தில் ரூபா 10.00 இனை செலுத்திப் பெற்று, கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் " **கடைக் கட்டடம் வாடகைக்குப் பெறுவதற்கான கூறுவிலை** " எனக்குறிப்பிட்டு **தலைவர், யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வது, இல 127, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.** என்னும் முகவரிக்கு 2022.07.23 ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ-து)** (cr.36645) (2.6)

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 07 . 1948



மறைவு 11 . 07 . 2022

**பொன்னையா மகாதேவன்**

யாழ்ப்பாணம் புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ். வண்ணார்பண்ணையை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா மகாதேவன் நேற்றுமுன்தினம் (11.07.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - மரகதம் தம்பதியரின் ஏக புதல்வரும், காலஞ்சென்ற கந்தையா - நல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற கந்தையா- பரமனாட்சி தம்பதியரின் பெறாமகனும், பவானி (சோதி) அவர்களின் ஆருயிர் கணவரும், துஷ்யந்தி (துளசி - கனடா), குமுதினி (கனடா), ஜீவஹாசன் (B.Sc Hons IT - மொறட்டுவப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பத்மரூபன் (காண்டீபன் - கனடா), ஜெனார்தனன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெனிஸ், ஜெசான், ஜெஸ்வின், ஹறிஸ் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, புவனேஸ்வரி மற்றும் பரமேஸ்வரன், விக்கினேஸ்வரன் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும், புஸ்பவதி (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான திருலோகநாதன், அருணகிரிநாதன் மற்றும் சரோஜினிதேவி, கருணாவதி, சர்வலோகநாதன் (ஜேர்மனி), வைத்தீஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை, மகேஸ்வரி மற்றும் ஜெகநாதன், ராதாலட்சுமி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அரவது இல்லத்தல் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.73, B-A தம்பிலேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (cs45544) (2.6)

தகவல் :
குடும்பத்தினர்
077 383 5227


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தாபய ராஜபக்சவால் தீவிரமாகியுள்ள நெருக்கடி



கொழும்பு, ஜூலை 13

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச சமுகமளிக்காததன் காரணமாக கட[...]ந திங்கட்கிழமை மாலை நடைபெற[...]ந்த அமைச்சரவைக் கூட்டம் ஒத்தி[...]கப்பட்டமையானது நாடு முகங்கொ[...]த்திருக்கும் எரிபொருள் நெருக்கடி[...]த் தீவிரப்படுத்தியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை மாலை நடைபெற்ற கட்சித்தலைவர்கள் கூட்டத்தின்போது மின்சாரம் மற்றும் வலுசக்தி அமைச்சரால் கடிதமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி அமைச்சரவையின் அனுமதிக்காக இந்த வாரம் மூன்று அமைச்சரவைப் பத்திரங்கள் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இதனூடாக மத்திய வங்கி மற்றும் நிதியமைச்சு ஆகியவற்றின் ஆலோசனைகளின் பிரகாரம் நிதிச்சந்தையிலிருந்து 128 மில்லியன் டொலரைத் திரட்டுவதற்கு உள்நாட்டு வங்கிகளுக்கு அனுமதி வழங்கப்படும்.

புதிய அரசாங்கம் நியமிக்கப்பட்டதன் பின்னர் தற்போதைய நிலையைக் கருத்திற்கொண்டு எரிபொருள் அவசரக் கொள்வனவில் ஈடுபடும்போது அதை ஆட்சேபிக்கப்போவதில்லை என்ற உத்தரவாதத்தை வழங்கவேண்டுமென்று இதன்போது கட்சித்தலைவர்களிடம் கோரப்பட்டது.

இருப்பினும் எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட சிலர் அதனை நிராகரித்ததுடன், அமைச்சரவையின் அனுமதியின்றி தம்மால் எந்தவொரு உத்தரவாதத்தையும் வழங்கமுடியாது என்றும் குறிப்பிட்டனர். அதன் காரணமாக அவசர கொள்வனவுக்கு நிதி திரட்டுவதற்கான முயற்சி இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# மாவட்டச் செயலரிடம் ஜனாதிபதி மாளிகை

## ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை

கையகப்படுத்திய ஜனாதிபதி மாளிகை உள்ளிட்ட புராதன கட்டடங்கள் உடனடியாக கொழும்பு மாவட்டச் செயலரின் பொறுப்பில் எடுக்கப்பட வேண்டுமென ஆர்ப்பாட்டக்காரர்கள் கோருகின்றனர்.

அவர்கள் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் உள்ளதாவது:-

90 நாள்களுக்கும் மேலாக நடைபெற்றுவரும் காலி முகத்திடம் போராட்டத்தின் இறுதிக்கட்டத்துக்கு நாடளாவிய ரீதியில் இருந்து கொழும்பு வந்த மக்களுக்கு முதலில் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லம், ஜனாதிபதி செயலகம், பிரதமர் இல்லம் ஆகிய இடங்கள் பலத்த முயற்சியின் பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்களால் கைப்பற்றப்பட்டன.

ஊழல் ஆட்சிக்கு எதிரான எதிர்ப்பின் வெளிப்பாடாகவே இந்தக் கட்டடங்களைக் கையகப்படுவதை நாம் புரிந்துகொண்டாலும், அந்தப் பொதுச் சொத்துக்களை பாதுகாப்பதும், வருங்கால சந்ததியினருக்கு அவற்றை அளிப்பதும் எமது பொறுப்பு என்று நாங்கள் நம்புகிறோம்.

போராட்டத்துக்கு வந்த ஒரு சில மக்களால் ஏற்படுத்தப்பட்ட சேதம் மேலும் தொடரக்கூடாது என்பது எமது கருத்து. எனவே அந்தக் கட்டடங்களை செஞ்சிலுவை சங்கம் போன்ற நடுநிலையாளர்கள் ஊடாக கொழும்பு மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளிக்க வேண்டுமென பரிந்துரைக்கின்றோம்.

இந்த பழங்கால கட்டடங்களின் எதிர்கால பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், மேலும் சேதம் ஏற்படாமல் தடுப்பதற்கும் இந்த நடவடிக்கை தாமதமின்றி எடுக்கப்பட வேண்டுமென்று நாங்கள் நம்புகிறோம் - என்றுள்ளது. (எ-இ)

### கோத்தாபய...

ஆகியோர் பதவிகளில் இருந்து விலகி இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் மக்களால் தூக்கியெறியப்படுவார்கள் ' என்று காலிமுகத்திடல் போராட்ட ஒருக்கிணைப்பாளர்கள் தெரிவித்தனர்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பதவிகளில் இருந்து விலகி இடைக்கால அரசாங்கம் நியமிக்கப்பட வேண்டுமென்பதே. அவர்களுக்கான இறுதி நாள் 13ஆம் திகதியே. அதற்குப் பின்னரும் அவர்கள் பதவிகளில் நீடிப்பார்களானால் மக்களால் அவர்கள் தூக்கியெறியப்படுவார்கள்.

நாங்கள் இப்போது போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில் இருக்கின்றோம். இதுவரை மக்கள் வழங்கிய ஆதரவை நாளையும் (இன்று) வழங்க வேண்டும். நாம் மக்களுக்கு விடுக்கும் கோரிக்கை அனைவரும் கொழும்புக்கு திரண்டு வந்து எமது இலக்கை வென்றெடுக்க ஆதரவு கொடுக்க வேண்டும்.

நாடாளுமன்ற சபாநாயகர் போராட்டத்தில் ஈடுபடுவோருடன் சில கலந்துரையாடல்களை நடத்தும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார் என்று நாங்கள் அறிந்துள்ளோம். அதற்கெல்லாம் நாம் தயாரில்லை. நாடாளுமன்றம் என்ன செய்ய வேண்டுமென்பதை நாம் எழுத்து மூலம் அறிவித்திருக்கின்றோம். அதையே நடைமுறைப்படுத்த வேண்டும் - என்றனர். (அ-எ-இ)

### மூன்று...

மே, ஜூன் மாதங்களில் கோண்டாவில் மஞ்சத்தடியில் இரண்டு வீடுகளை உடைத்து தங்க நகைகள், பெறுமதி வாய்ந்த அலைபேசிகள், சமையல் எரிவாயு சிலிண்டர் மற்றும் சைக்கிளைத் திருடியமை தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

மற்றொரு வீட்டில் பெண் அணிந்திருந்த தங்க நகை அறுக்கப்பட்டிருந்தது. அது தொடர்பிலும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

சம்பவங்கள் தொடர்பில் யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் தலைமை பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்சிஸ் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

சம்பவங்கள் தொடர்பில் சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த முதன்மை சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் உடந்தையாக இருந்தவர்கள் அடகு வைத்துக் கொடுத்தவர்கள் என கிளிநொச்சி, சுன்னாகம் மற்றும் யாழ்ப்பாணம் நகைக்கடை உரிமையாளர் என மேலும் 9 பேர் கைது செய்யப்பட்டனர். திருட்டப்பட்ட பொருள்கள், கொள்ளையிடப்பட்ட பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

முதன்மை சந்தேகநபர் போதைப் பொருளுக்கு அடிமையாகி தொடர்ச்சியாக கொள்ளை மற்றும் திருட்டில் ஈடுபட்டு வந்ததுடன் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர் என்று பொலிஸார் கூறினர். (எ-இ)

# கண்ணீர் அஞ்சலி



எமது சக முகாமையாளர்

**அம்பிகைபாகன் பரமேஸ்வரி**

அவர்களின் அன்புச் சகோதரன்

**அம்பிகைபாகன் மகேந்திரன்**

அவர்கள் கடந்த (10.07.2022) அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்.மாவட்ட சமுர்த்தி முகாமையாளர், சங்கம்.**

# மரண அறிவித்தல்

பிறப்பு
02 . 08 . 1937



இறப்பு
10 . 07 . 2022

## அல்போன்ஸ் மரியநாயகி

**(ஓய்வுபெற்ற அதிபர் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்)**

பொலிகண்டியை பிறப்பிடமாகவும், கட்டைகாட்டை நிரந்தர வதிவிடமாகவும், இல.24. சின்னக்கடை வீதி, குருநகரை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட அல்போன்ஸ் மரியநாயகி (ஓய்வுபெற்ற அதிபர், வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்) அவர்கள் கடந்த (10.07.2022) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கு ஆரோக்கியம் தம்பதியரின் அன்பு புதல்வியும் காலஞ்சென்ற அல்போன்ஸ் (பரந்தன் இரசாயன பொருட்கள் கூட்டுத்தாபனம்) அவரின் அன்பு மனைவியும், ரவிச்சந்திரன் (கொலண்ட்), மரியசாந்தினி (சாந்தி), குலேந்திரன் (குலம்), மரிய ஜெயந்தினி (கொலண்ட்), ஜெயந்திரன் (கொலண்ட்) ஆகியோரின் அன்புத் தாயாரும், றொசிற்றா (கொலண்ட்), சீமோன்ததேயூ (சூசைதாஸ்), வசந்தி (பெல்ஜியம்), காலஞ்சென்ற ஜெனி மற்றும் சசி (கொலண்ட்) ஆகியோரின் மாமியாரும், றொபியா (கொலண்ட்), ரைசன் (லண்டன்), எம்பியூறி (பெல்ஜியம்), மேளின் புறுசியா (கொலண்ட்), ஸ்பிறிங்கிள், மைக்ஸ்மிலன் (மது), றெறன்சியா (கொலண்ட்), றாதா (கொலண்ட்), ஸ்ரெபானி, சாருஜா (கொலண்ட்), மிர்யம் (கொலண்ட்), சௌமி (கொலண்ட்), ஜெய்சா (கொலண்ட்), புளோறிஸ் (கொலண்ட்), றோசி (லண்டன்), யூலி, கபிலன் (கொலண்ட்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், ரைறோ (லண்டன்), லாறா (கொலண்ட்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.07.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கட்டைக்காடு புனித கப்பலேந்தி மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கட்டைக்காடு கப்பலேந்தி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொ.இல.077 373 6897

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவித்தல்

**யாழ்ப்பாணம் தென்மராட்சி வரணி இயற்றாலை கொட்டிக்கியானிற் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா வரணி**

மேற்படி ஆலயம் எனது முகாமைத்துவத்திலும் பராமரிப்பிலும் நிர்வாகிப்பிலும் இருந்து வருகின்ற தென்றும் குறித்த கோவிலின் கட்டடங்கள் 2000/2002 ம் ஆண்டு இராணுவ நடவடிக்கையின் போது முற்றாக சேதமடைந்தமையால் குறித்த கோவில் திருப்பணி வேலைகளை செய்யவேண்டிய தேவை ஏற்பட்டதன் காரணமாக குறித்த கோவிலின் மூலஸ்தானம் அர்த்தமண்டபம் மகா மண்டபம் தரிசனமண்டபம் என்பன யாவும் ஏகதளத்துடன் கருங்கற்களினால் சிற்ப வேலைப்பாடுகளுடன் கட்டுவதற்காக தீர்மானிக்கப்பட்டு இதற்கான கட்டட ஒப்பந்தகாரரான இருபாலை யாழ்ப்பாணத்தை சேர்ந்த சுப்பிரமணியம் தமிழ்ச் செல்வன் என்பவரை நியமித்து அவருடன் பகுதி பகுதியாக செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் 80% வீதமான வேலைகள் பூரணமடைந்துள்ளது எனவும் குறித்த திருபணி சம்பந்தமாக நான் இதுவரையும் திருப்பணி நிதி பற்றுச்சீட்டு கொடுத்து எவரிடமும் பணம் சேகரிக்கவில்லையென்றும் தற்போது ஒருசில நபர்கள் எனது அனுமதியின்றி குறித்த ஆலயத்தின் பேரால் திருப்பணிபற்றுச்சீட்டு கொடுத்து பணம் சேகரித்து வேறு சில கட்டட ஒப்பந்தகாரரை ஏற்படுத்த முயற்சிப்பதாகவும் என்னால் அறியமுடிகின்றது. ஆகையால் குறித்த ஆலயம் தொடர்பாக எவராலும் மேற்கொள்ளும் செய்கைகளுக்கு நான் பொறுப்பாளி இல்லை என்பதை யாவருக்கும் அறியத்தருகின்றேன்.

வே.நித்தியானந்தன்
தர்மகர்த்தா

# மரண அறிவித்தல்

பிறப்பு 16 . 10 . 1941



இறப்பு 12 . 07 . 2022

## பிலிப்பு காவியார் மத்தியாஸ்

**(ஓய்வுபெற்ற முன்னாள் உதவி அரசாங்க அதிபர்)**

புனித செபஸ்தியார் வீதி, பலாலியை பிறப்பிடமாகவும் 262 புன்ன நீராவி விசுவமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப்பு காவியார் மத்தியாஸ் அவர்கள் நேற்று (12.07.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பிலிப்பு எலிசபேத் தம்பதியரின் அன்பு மகனும், கிறிஸ்தோ பாக்கியம் தம்பதியரின் மருமகனும், நட்சேத்திரத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சலோசப்பு, பிலோமினா, குணகுந்தம்மா, யாகப்பர், நீற்றம்மா, செபஸ்ரியாம்பிள்ளை மற்றும் இம்மானுவேல் (துரை) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற கிறிஸ்தோ மாசிலாமணி (கிராம அலுவலர்), மரியதாஸ், காலஞ்சென்ற செபமாலையம்மா மற்றும் யோய் கிருபாகரன், நேவிஸ் எமிலி ஆகியோரின் மைத்துனரும், கொட்பிறி பிரசன்னா (பிரான்ஸ்), ஜெசி அஞ்சலா (பிரான்ஸ்), எட்வேட் அமலதாஸ் (ஜேர்மனி), வில்லியம் ஜேசுதாசன் (நோர்வே), டெஸ்மன் லோறன்ஸ், கொட்பிறி மேசியா ஆகியோரின் பெரியப்பாவும், வோஸ்மிகாவின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.07.2022) புதன்கிழமை பிரம்மந்தன் இறை இரக்க ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித ராயப்பு சேமக்காலையில் பி.ப 1 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 0824 974
R.டெஸ்மன் (மருமகன்)

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 19962) 1/6

# மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 09 . 1948



மறைவு 11 . 07 . 2022

## திருமதி இராசதுரை மனோரஞ்சிதம்

யாழ்ப்பாணம் இணுவில் கிழக்கை பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்டவருமான இராசதுரை மனோரஞ்சிதம் அவர்கள் 11.07.2022 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா சவுந்தரம் தம்பதியினரின் மகளும் காலஞ்சென்ற இராமலிங்கம் சிவகொழுந்து தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற இராசதுரையின் அன்பு மனைவியும், ஜெயவாணி (சுவிற்ஸர்லாந்து), ஆனந்தநாயகி (சுவிற்ஸர்லாந்து), அரவிந்தன் (இங்கிலாந்து) ஆகியோரின் பாசமிகு தாயாரும், உதயகுமார் (சுவிற்ஸர்லாந்து), சிவஞானந்தன் (சுவிற்ஸர்லாந்து), சர்மினி (இங்கிலாந்து) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் உர்சலா, உர்சனா, சிவேஸ், சிரோஜ், சினேகா, அஸ்வினி, அஸ்வின், கன்சிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான துரைராஜா, மகேஸ்வரி, இரத்தினேஸ்வரி, இராஜேஸ்வரி, பூபாலசிங்கம், சிவலிங்கம், கனகசிங்கம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், வடிவேஸ்வரி காலஞ்சென்ற சண்முகலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2022) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆடியபாதம் வீதி 2ம் ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்
077 670 1447

# மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 07 . 1962



மறைவு 12 . 07 . 2022

## வடிவேலு பாலசுப்பிரமணியம்

**(முன்னாள் சிமெந்து தொழிற்சாலை எரியூட்டுனர், ஜெயசக்தி மருந்தக உரிமையாளர் - மருதனார்மடம்)**

அவ்வொல்லை, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும், நாகம்மாள் வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வடிவேலு பாலசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (12.07.2022) செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2022) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டைவிட்டு...

ஜனாதிபதி கோத்தாபயவும், அரசாங்கமும் பதவி விலகவேண்டுமென்று கடந்த சில மாதங்களாக நாட்டில் மக்கள் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆயினும் பதவியில் இருந்து விலகுவதற்கு கோத்தாபய ராஜபக்ச மறுத்து வந்தார். கடந்த 9ஆம் திகதி ஜனாதிபதி மாளிகை ஆர்ப்பாட்டக்காரர்களால் சுற்றிவளைக்கப்பட்டு, கைப்பற்றப்பட்டது. அங்கிருந்து தப்பிச் சென்ற ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவி விலகுவதற்குத் தயார் என்று அறிவித்திருந்தார்.

இன்றைய திகதியிட்ட பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கையளித்துள்ளார் என்று தெரிவிக்கப்படும் நிலையில், அவர் நாட்டில் இருந்து வெளியேறிச் செல்ல முயன்றமை தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

நேற்றுமுன்தினம் 4 தடவைகள் ஜனாதிபதி உட்பட 15 பேர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து நாட்டைவிட்டு வெளியேற முயற்சித்தனர் என்று பிரான்ஸ் ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. ஆனால், நடைமுறைச் சிக்கல் காரணமாக அந்த முயற்சி தோல்வியடைந்துள்ளது.

கடந்த 9ஆம் திகதி ஜனாதிபதி மாளிகையில் இருந்து வெளியேறிய கோத்தாபய ராஜபக்ச, திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் தஞ்சமடைந்தார். கடந்த திங்கட்கிழமை பெல்-412 உலங்குவானூர்தியில் அவர் இரத்மலானை விமான நிலையம் சென்றுள்ளார். அதன்பின்னர் முப்படைத் தளபதிகளுடன் பேச்சை மேற்கொண்ட பின்னர் நேற்றுமுன்தினம் மாலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்குச் சென்றுள்ளார்.

கோத்தாபய ராஜபக்சவும், அவரது குழுவினரும் சிறிலங்கா எயார்லைன்ஸ் 'யு.எல்.- 225' விமானம் மூலம் டுபாய் செல்லத் திட்டமிட்டிருந்தனர் என்று விமானப் படையைச் சேர்ந்த அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி தகவல் வெளியாகியுள்ளது.

ஆனால், பட்டுப்பாதை பிரமுகர் நுழைவாயில் சேவைகளை வழங்க விமான நிலைய அதிகாரிகள் மறுத்ததால், கோத்தாபய ராஜபக்சவும் அவரது குழுவும் திரும்பிச் செல்ல வேண்டி ஏற்பட்டது என்று கூறப்படுகின்றது.

இன்னொரு விமான நிலையமான மத்தள விமான நிலையம் ஊடாகவும் கோத்தாபய மற்றும் அவரது குழுவினர் வெளிநாடு செல்ல முயற்சித்தபோதும், அங்கும் விமான நிலைய அதிகாரிகள் அதற்கு அனுமதிக்கவில்லை என்று தெரிகின்றது.

இதேநேரம், கடந்த வாரம் கோத்தாபய ராஜபக்ச அமெரிக்கத் தூதரகத்திடம் நுழைவிசைவு கோரி விண்ணப்பித்திருந்த நிலையில், அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது என்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரஜாவுரிமையைத் துறந்த ஒருவருக்கு மிகவும் தவிர்க்க முடியாத சூழ்நிலைகளைத் தவிர விருந்தினர் நுழைவிசைவை வழங்க முடியாது என்று தூதரகம் கோத்தாபய ராஜபக்சவுக்கு பதில் வழங்கியிருக்கின்றது என்று தெரிகின்றது.

இது தொடர்பாக ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்துள்ள தூதரகப் பிரதிநிதி ஒருவர், அவர் (கோத்தாபய ராஜபக்ச) நாட்டின் தலைவராக நுழைவிசைவு இன்றிச் செல்ல முடியும் என்பதை நினைவுபடுத்தினோம். ஆனால், தற்போதைய சூழ்நிலைகள் வேறுவிதமானவை என்று குறிப்பிட்டுள்ளார். அவருக்கு நுழைவிசைவு வழங்க முடியாது என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கோத்தாபய ராஜபக்சவின் இந்தியாவுக்குப் பயணமாகும் முயற்சியும் தடுக்கப்பட்டுள்ளது என்ற தகவலும் வெளியாகியிருக்கின்றது. இலங்கையின் 'ஏ.என்.-32' விமானம் ஜனாதிபதி கோத்தாபயவுடன் இந்திய விமான நிலையம் ஒன்றில் தரையிறங்குவதற்கு விடுக்கப்பட்ட கோரிக்கை, இந்தியாவால் நிராகரிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

(அ-எ-இ)

## பதவி விலகார்...

கடந்த 9ஆம் திகதி ஆர்ப்பாட்டக்காரர்களால் ஜனாதிபதி செயலகம் கைப்பற்றப்பட்டிருந்த நிலையில், இன்று பதவியில் இருந்து விலகுவேன் என்று கோத்தாபய ராஜபக்ச அறிவித்திருந்தார்.

அவர் பாதுகாப்பாக வெளிநாடொன்றுக்குச் செல்லும் முயற்சித்தபோதும், அதற்கும் தடை ஏற்பட்டுள்ள நிலையில், அவர் பதவி விலகுவது தொடர்பில் நிச்சயமற்ற தன்மை ஏற்பட்டுள்ளது என்று சொல்லப்படுகின்றது.

பாதுகாப்பாக வெளிநாடு செல்லும் வரையில் அவர் ஜனாதிபதி பதவியில் இருந்து விலக மாட்டார் என்றும், அவர் வெளிநாடு சென்ற பின்னரே அவரது பதவி விலகல் கடிதத்தை சபாநாயகருக்கு உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படும் என்றும் தகவல்கள் நேற்றிரவு வெளியாகின.

அதேவேளை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் அவரது குடும்பத்தினர் பாதுகாப்பாக வெளியேறும் பாதையை உருவாக்குவது தொடர்பாக பிரதமர் பேச்சை நடத்தி வருகின்றார் என்று நேற்றுத் தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், பிரதமர் அலுவலகம் அதை உடனடியாகவே நிராகரித்துள்ளது.

(அ-எ-இ)

## பறந்துபோக...

பஸில் ராஜபக்ச, மக்களதும் அதிகாரிகளினதும் கடும் எதிர்ப்பு காரணமாக அங்கிருந்து திரும்பிச்செல்ல நேரிட்டது.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள், பிரமுகர் நுழைவாயிலில் சோதனை நடவடிக்கையிலிருந்து விலகியுள்ளனர். அவர்கள் பஸில் ராஜபக்சவின் ஆவணங்களில் முத்திரையிட மறுத்ததால், பஸில் ராஜபக்ச மீண்டும் திரும்பிச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள அரசியல் பிரமுகர்கள் நாட்டிலிருந்து வெளியேறுவதற்காக பிரமுகர் நுழைவாயிலை பயன்படுத்துவதற்கான சாத்தியங்கள் காணப்படுவதால், அந்தப் பகுதியில் சோதனை நடவடிக்கையிலிருந்து விலகியுள்ளோம் என்று இலங்கை குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் கே.ஏ.ஏ.எஸ். கனுகல தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## பாண்...

படும் என்று யாழ்ப்பாணம் மாவட்ட பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது. பணிஸ் வகைகளின் விலைகளும் 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, டீசல் பற்றாக்குறை தொடர்பாக யாழ்ப்பாணம் மாவட்ட பேக்கரி உரிமையாளர்கள் சங்கப் பிரதிநிதிகளுக்கும், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலருக்கும் இடையே சந்திப்பு ஒன்று நடந்துள்ளது.

ஒரு வாரத்துக்கு பாண் உற்பத்திக்கு 6 ஆயிரம் லீற்றர் டீசல் தேவை என்று கோரப்பட்டிருந்த நிலையில், 800 லீற்றர் டீசல் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலரால் ஒதுக்கித் தரப்பட்டுள்ளது என்று பேக்கரி உரிமையாளர்கள் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். நல்லூர் மற்றும் யாழ்ப்பாணம் பிரதேச செயலகங்களுக்குட்பட்ட பேக்கரிகளுக்கு நல்லூர் பிரதேச செயலர் ஒரு தொகுதி டீசல் வழங்கியுள்ளார். அதனால் ஓரிரு நாளைக்கு பேக்கரி உற்பத்திகளை மேற்கொள்ள முடியும். அதன்பின்னர் பேக்கரி உற்பத்திகள் தடைப்படும் அபாயம் உள்ளது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

(அ-எ-இ)

## கடல்...

கடற்படை ரோந்துப் படகைப் பயன்படுத்துவது தொடர்பாக ஆராய்கின்றார் என்று சர்வதேச ஊடகமான ஏ.எவ்.பி. செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை ஜனாதிபதி மாளிகையைச் சூழ்ந்து கொண்ட ஆர்ப்பாட்டக்காரர்களிடம் இருந்து தப்புவதற்காக ராஜபக்சக்கள் அவசர அவசரமாக வெளியேறியபோது, பஸில் ராஜபக்ச தனது கடவுச்சீட்டை அங்கு தவறவிட்டுள்ளார். அதனால் அவர் புதிதாக அமெரிக்கக் கடவுச்சீட்டைப் பெற வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

ஜனாதிபதி தற்போது எங்கிருக்கின்றார் என்பது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் உத்தியோகபூர்வமாக எதுவும் அறிவிக்கவில்லை. ஆயினும் அவர் தொடர்ந்தும் முப்படைகளின் தளபதியாக இருக்கின்றார். அவர் பயன்படுத்துவதற்கான இராணுவ வளங்கள் உள்ளன.

கடற்படைக் கலம் ஒன்றில் ஜனாதிபதியையும், அவரது பரிவாரங்களையும் வெளிநாட்டுக்குக் கொண்டு செல்வது தொடர்பில் ஜனாதிபதியின் நெருங்கிய படைச் சகாக்கள் ஆராய்ந்து வருகின்றனர் என்று உயர் பாதுகாப்புத் தரப்பொன்று தெரிவித்தது.

கடல்வழியாக வெளியேறுவதே தற்போது சிறந்த தெரிவாக இருக்கின்றது என்று தெரிவித்துள்ள பாதுகாப்பு அதிகாரி ஒருவர் ஜனாதிபதி மாலைதீவுக்கோ அல்லது இந்தியாவுக்கோ செல்லலாம். அல்லது விமானம் மூலம் டுபாய்க்குச் செல்லலாம் அல்லது மத்தள விமான விலையம் ஊடாக விமானம் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி வெளிநாட்டுக்குச் செல்வதற்கான வாய்ப்புக்களும் உள்ளன என்று அதிகாரபூர்வ வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏ.எவ்.பி. செய்தி வெளியிட்டுள்ளது. (அ-எ-இ)

## எரிபொருள்...

கொண்டு வரப்பட்டுள்ளது.

இதுவரை ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு எரிபொருள் விநியோக அட்டையே வழங்கப்பட்டு வந்த நிலையில் தற்போது ஒவ்வொரு வாகனத்துக்கும் விநியோக அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலருக்கும், பிரதேச செயலர்களுக்கும் இடையே நடந்த கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஒருவரின் பெயரில் ஒன்றுக்கு மேற்பட்ட வாகனங்கள் இருக்குமானால் அவற்றில் ஒன்றுக்கே விநியோக அட்டை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை பெற்றோல் விநியோகத்துக்கான விநியோக அட்டைகளே வழங்கப்பட்டன என்றும், இனிமேல் டீசல் வாகனங்களுக்கான விநியோக அட்டைகளும் வழங்கப்படும் என்றும் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் தெரிவித்துள்ளது. (அ-எ-5)

## அமைதியான...

சட்டத்தின் ஆட்சி மற்றும் அரசமைப்புக்கு உட்பட்டு சுமுகமான மற்றும் அமைதியான அதிகார மாற்றத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களாக மக்கள் உண்மையான மாற்றத்துக்காக மேற்கொண்ட தியாகங்கள் கணக்கிடமுடியாதவை.

இலங்கை மக்களின் உயிர்களையும், வாழ்வாதாரத்தையும் பாதுகாப்பதற்கு அமைதியான மாற்றத்தையும், இலங்கையில் சட்டத்தின் ஆட்சி, அரசமைப்புக்கான தொடரும் மதிப்பையும் உறுதிப்படுத்த வேண்டியதும் முக்கியமானது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் உட்பட பல்வேறு தரப்பினரின் அறிக்கைகள் சட்டத்தின் ஆட்சியைக் குறைமதிப்பீட்டுக்கு உட்படுத்துவது போன்று காணப்படுவது தொடர்பாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது - என்றுள்ளது. (எ-இ)

## பயணத்தடை...

ஆகியோருக்கு வெளிநாட்டுப் பயணத் தடை விதிக்க வேண்டுமென்று கோரி உயர் நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக விசாரணைகளை முன்னெடுக்க உத்தரவிட வேண்டுமென்று கோரி, இலங்கை வர்த்தக சபையின் முன்னாள் தலைவர் சந்திரா ஜயரத்ன உள்ளிட்ட தரப்பால் ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமை மனுவுடன் இந்த நகர்த்தல் பத்திரமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அடிப்படை உரிமை மனுவானது உயர் நீதிமன்றத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி ஆராயப்படவுள்ளது என்று நகர்த்தல் பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் அமைதியின்மை காரணமாக, இந்த மனுவில் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஜனாதிபதியின் இருப்பிடத்தைக் கூட பொதுமக்கள் அறிந்துகொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிவாதிகள் சிலர் நாட்டைவிட்டு தப்பிச்செல்வதற்குத் தயாராகின்றமை தொடர்பில் வெளிக்கொணரப்பட்டுள்ளது என்றும் நகர்த்தல் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வர்த்தக சபையின் முன்னாள் தலைவர் சந்திரா ஜயரத்ன, நீச்சல் சாம்பியனான ஜூலியன் போலிங், ஜெஹான் கனகரத்ன மற்றும் ட்ரான்பரன்ஸி இன்ரநஷனல், ஶ்ரீலங்கா நிறுவனம் இணைந்து இந்த அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்துள்ளன.

இந்த மனுக்களை அவசர மனுக்களாகக் கருதி நாளை விசாரணைக்கு எடுக்க உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது என்று தெரியவருகின்றது.

(அ-எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமி

- ஓ.பி.எஸ். ஆதரவாளர்கள் குழப்பம்
- இருதரப்பினரிடையே கைகலப்பு
- 58 பேர் படுகாயம்
- தலைமை அலுவலகத்துக்கு சீல்



சென்னை, ஜூலை 13

அ.தி.மு.க. இடைக்காலப் பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமி தெரிவாகியுள்ள நிலையில் ராயப்பேட்டையிலுள்ள அ.தி.மு.க தலைமை அலுவலகத்தில் ஓ.பன்னீர் செல்வத்தின் ஆதரவாளர்கள் மற்றும் எடப்பாடி பழனிசாமியின் ஆதரவாளர்கள் இடையே நேற்றுமுன்தினம் மோதல் ஏற்பட்டு பெரும் கலவரமாக வெடித்துள்ளது.

அ.தி.மு.கவின் ஒற்றைத் தலைமை யாருக்கு என்பது தொடர்பில் ஓ.பன்னீர்செல்வம் - எடப்பாடி பழனிசாமி இடையே மோதல் நாளுக்கு நாள் உச்சகட்டத்தை அடைந்து வருகிறது. ஓ.பி.எஸ். - இ.பி.எஸ். இருவரும் சட்டப் போராட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் அ.தி.மு.கவின் பொதுக்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் 11ஆம் திகதி வானகரத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் அ.தி.மு.க. இடைக்கால பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்த நிலையில் ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகம் முன் ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் மற்றும் எடப்பாடி பழனிசாமி ஆதரவாளர்கள் இடையே மோதல் ஏற்பட்டு கலவரமாக மாறியுள்ளது. இதையடுத்து அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டு கலவரம் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. மோதலில் 58 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் ஓ.பி.எஸ். - ஈ.பி.எஸ். என இரு தரப்பினரும் மாறி மாறி முறைப்பாடுகள் அளித்த நிலையில் எடப்பாடி பழனிசாமி தரப்பில் 200 பேர் மீதும், ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் 200 பேர் மீதும் பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

அத்துடன் வருவாய்த்துறை அதிகாரிகள் கட்சி அலுவலகத்துக்குள் நுழைந்து அலுவலகத்தின் நுழைவாயில் கதவை மூடி சீல் வைத்துள்ளனர். மேலும், அலுவலகத்தின் மீது யாருக்கு உரிமை உள்ளது என்பது குறித்துஜூலை25ஆம்திகதி நீதிமன்றில் முன்னிலையாகி இருதரப்பினரும் விளக்க மளிக்கும்படியும் அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

(ச-இ)

## தமிழக முதலமைச்சருக்கு கொரோனாத் தொற்று



சென்னை, ஜூலை 13

தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலினுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனா பாதிப்புக் காரணமாகத் தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளேன் என மு.க ஸ்டாலின் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அதில், "இன்று (நேற்று) உடற்சோர்வு காணப்பட்ட நிலையில் பரிசோதனை மேற்கொண்டபோது கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து என்னைத் தனிமைப் படுத்திக் கொண்டுள்ளேன். அனைவரும் முகக்கவசம் அணிவதோடு, தடுப்பூசிகளைச் செலுத்திக் கொண்டு, பாதுகாப்பாக இருங்கள்" என்று பதிவிட்டுள்ளார்.

(ச-இ)

## அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் பதவி என்னிடம்தான் உள்ளது

### ஓ.பி.எஸ். தெரிவிப்பு

சென்னை, ஜூலை 13

கட்சியின் பொருளாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் என்ற முறையில் தற்போதும் அ.தி.மு.க. என்னிடம்தான் உள்ளது. என்னைத் தவிர வேறு யாரும் இதற்கு உரிமை கோர அனுமதிக்கக்கூடாது என ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க.வில் ஒற்றைத் தலைமை தொடர்பாக உச்ச நீதிமன்றம், உயர்நீதிமன்றத்தில் பல்வேறுகட்ட விசாரணைகளுக்குப் பிறகு அ.தி.மு.க.வின் பொதுக்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமி நியமிக்கப்பட்டார்.

மேலும் கட்சியின் அடிப்படை உறுப்பினர் உட்பட அனைத்துப் பதவிகளிலிருந்தும் ஓ.பன்னீர் செல்வம் நீக்கப்பட்டார்.

அதுமட்டுமன்றி ஓ.பி.எஸ்ஸின் ஆதரவாளர்களும் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டனர்.

இந்தநிலையில், ஓ.பி.எஸ் நேற்று "தனக்கு தெரியாமல் கட்சியின் வரவு - செலவு கணக்குகளை யாரிடமும் ஒப்படைக்கக் கூடாது" என வங்கிகளுக்கும் தேர்தல் ஆணையத்துக்கும் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில், "நடைபெற்ற கட்சியின் பொதுக்குழு என்பது, விதிமுறைகளை மீறி செயற்பட்டுள்ளது. கட்சியின் ஒருங்கிணைப்பாளர்களைத் தவிர வேறு யாரையும் அ.தி.மு.கவை உரிமை கோர அனுமதிக்கக்கூடாது.

கட்சியின் பொருளாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் என்ற முறையில், தற்போதும் அ.தி.மு.க. என்னிடம் தான் உள்ளது.

கட்சியின் ஒருங்கிணைப்பாளர் பதவியிலிருந்தும், அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்தும் நான் உட்பட என்னைச் சார்ந்தவர்களை நீக்கியது செல்லாது.

மேலும், எங்களைத் தவிர வேறு யாரும் இதற்கு உரிமை கோர அனுமதிக்கக் கூடாது- என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(ச-இ)

**பணிப்பெண் தேவை**

யாழ்.நகரில் உள்ள வீடொன்றிற்கு 40 வயதிற்கும் 55 வயதிற்குட்பட்ட தங்கி நிற்க கூடிய பெண் வேலையாள் தேவை.
சம்பளம் – 35,000
மூன்று நேர உணவு, தங்குமிட வசதி
077937 0000
075 988 0000,075 498 5400

**பெண் வேலையாள்த் தேவை**

யாழ்.நகரில் உள்ள கடை ஒன்றிற்கு 18 வயதிலிருந்து 30 வயதிற்குட்பட்ட பெண் வேலையாள்கள் தேவை.
சம்பளம் – 35,000
077937 0000
075 988 0000,075 498 5400

**உடனடி வேலை வாய்ப்புகள்**

யாழ். நல்லூரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்துக்கு (City Tex - Nallur) அனுபவம் உள்ள, பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை.
சம்பளம் = 35000/-, வயது 18–25 வரை
021 221 6185, 077 293 5537

**பணியாளர்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கும் ரொலெக்ஸ் உணவகத்திற்கு பின்வரும் வேலை ஆட்கள் இருபாலாரும் தேவை.
1. கணக்காளர்
2. பார்சல் கட்டுபவர்கள்
3. உணவு பரிமாறுபவர்கள்
4. துப்புரவு பணியாளர்கள்
077 846 1024

**பணியாளர் தேவை**

எமது கல்வி நிறுவனம் கீழ்வரும் பணியாளர்களை எதிர்பார்க்கின்றது
- வகுப்பு மேற்பார்வையாளர் ஆண் / பெண்
- சுத்திகரிப்பாளர் ஆண் / பெண்
- சிற்றுண்டிச்சாலை ஊழியர் ஆண் / பெண்
- சிற்றுண்டிச்சாலை மேற்பார்வையாளர் ஆண் / பெண்

16.07.2022 சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நேர்முகத்தேர்விற்கு சமூகமளிக்கவும்.
New Science World
(Navalar Road - Brown Road, Junction,Jaffna.
021 221 6690, 077 336 4055
(Cr 36648) (2.6)

**மரண அறிவித்தல்**

தோற்றம் 26 - 10 - 1953



மறைவு 12 - 07 - 2022

**செல்லையா முருகவேள்**

வேலணை வடக்கு (5ம் வட்டாரம்) சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும் நாவலர் வீதியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட செல்லையா முருகவேள் அவர்கள் நேற்று (12.07.2022) செவ்வாயக்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா இராசலெட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்வராசா அன்னலட்சுமி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் சசிகலாவின் அன்புக்கணவரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 077 806 5154 076 861 8926 தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.